Registered as a Newspaper in Ceylon

விலை சதம் 10

ஈழநாடு

EELA NADU

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற்பெட்டி எண்: 49

மலர் 6 யாழ்ப்பாணம் குரோதி சித்திரை 22 ஆம் நாள் துல்ஹஜ் 21 (4-5-64) திங்கட்கிழமை இதழ் 83

ஈழநாடு
சந்தா விபரம்

இந்தியா — இலங்கை	வாரப்பதிப்பு உட்பட	வாரப்பதிப்பு மட்டும்
1 வருடம்	48-00	1-00
6 மாதம்	25-00	6-50
3 மாதம்	13-00	3-25

வடபகுதிக்கு என்.எம். திடீர் விஜயம்

கூட்டாட்சி யோசனைக்கு ஆதரவு திரட்டுகிறார்

யாழ்ப்பாணம், திங்கள்

லங்கா சமசமாஜக் கட்சித்தலைவர் டாக்டர் என். எம். பெரேரா நேற்று யாழ்ப்பாணத்துக்கு திடீர் விஜயம்செய்தார். நேற்றுக் காலை ரயிலில் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த டாக்டர் பெரேரா வடபகுதியிலுள்ள சமசமாஜக் கட்சியின் முக்கிய பிரமுகர்களைச் சந்தித்துப் பேசினார்.

டாக்டர் என்.எம். பெரேரா நேற்றுக் காலை யாழ்ப்பாணம் ரயில் நிலையத்தில் வந்திறங்கியதும் யாழ்ப்பாண மாநகர சபை அங்கத்தவரும் சமசமாஜக்கட்சி அங்கத்தவருமான வழக்கறிஞர் திரு. நாகராசா வரவேற்று அழைத்துச் சென்றார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்துடன் இடதுசாரி ஐக்கிய முன்னணி கூட்டுச் சேர்வது சம்பந்தமாக சமசமாஜகட்சிக்குள் எழுந்துள்ள

(5-ம் பக்கம் பார்க்க)

காங்கேசன்துறைமுகத்திலிருந்து தேயிலை ஏற்றுமதிக்கு அனுமதி இல்லை!

நல்லூர், திங்கள்

காங்கேசன்துறைத் துறைமுகத்திற்கு ஊடாக பிறநாடுகளுக்கு தேயிலை ஏற்றுமதி செய்ய சில தேயிலைக் கம்பனிகள் எடுத்த முயற்சி பலனளிக்கவில்லையென்று தெரிகிறது.

கடந்த மாத முற்பகுதியில் திருக்கோணமலை தேயிலை பரிபாலன ஸ்தானத்தைச் சேர்ந்த அதிகாரி, தோட்டத்துரை, புகையிரதப் பகுதி அதிகாரி ஆகியோர் காங்கேசன்துறைக்கு விஜயம் செய்து பார்வையிட்டுச் சென்றனர்.

பிறநாடுகளுக்கு காங்கேசன்துறைத் துறைமுகத்திற்கு ஊடாக தேயிலையை ஏற்றுமதி செய்ய அரசாங்கம் இக்கம்பனிகளுக்கு இதுவரையும் அனுமதியளிக்கவில்லை. இத்தகைய தேயிலைக் கம்பனி அதிகாரி ஒருவர் காங்கேசன்துறையிலுள்ள ஏற்றுமதியாளர் ஒருவருக்கு அறிவித்துள்ளார்.

கொழும்பு, திருக்கோணமலை ஆகிய துறைமுகங்களில் ஏற்றுமதி விஷயத்தில் சமீப காலங்களில் ஏற்படும் காலதாமதம் காரணமாக காங்கேசன்துறை துறைமுகத்திற்கூடாக தேயிலை ஏற்றுமதி செய்யும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

காங்கேசன்துறைத் துறைமுகத்திற்கூடாகப் பொருட்களை ஏற்றுமதி செய்ய அனுமதி கிடைக்க நடவடிக்கை எடுக்கும்படி காங்கேசன்துறை எம். பி, திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்திடம் கோரப்பட்டுள்ளது. துறைமுகத்தை உடனடியாக அபிவிருத்தி செய்யாவிடினும் தொங்குபாலமொன்றினை அமைக்கவாவது நடவடிக்கை எடுக்கும்படி அரசாங்கத்தை வற்புறுத்தும்படியும் திரு எஸ். ஜே. வி. செல்வநாயகத்திடம் கேட்கப்பட்டுள்ளது.

காங்கேசன்துறைத் துறைமுகத்திற்கு ஊடாகப் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்படும் நிலை உருவானால் ஆயிரக்கணக்கான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்க வழி ஏற்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மொழிச் சட்டத்தினால் பதவி இழந்த தமிழர் ஒருவரை எம்.பி.யாக்க யோசனை

நல்லூர், திங்கள்

தமிழ்ப் பிரதேசங்களில் உள்ள தேர்தல் தொகுதி ஒன்றிலிருந்து அரசாங்கத்தின் உத்தியோக மொழிச் சட்டத்தினால் பாதிக்கப்பட்ட ஒருவர் தெரிவு செய்யப்படுவதற்கான ஆலோசனை வெளியிடப்பட்டுள்ளது.

பார்லிமென்டில் தமிழ் அரசாங்க உத்தியோகத்தர்கள் சார்பில் ஒரு உறுப்பினர் அங்கம் வகிக்கவேண்டும் என்ற யோசனையை தமிழரசுக்கட்சிப் பிரமுகரும் தமிழரசுக்கட்சி உடுப்பிட்டிக்கிளைத் தலைவருமான திரு. கே. ஜெயக்கொடி வெளியிட்டார்.

அரசாங்கத்தின் உத்தியோக மொழிச் சட்டத்தினால் வேலையிலிருந்து நீக்கப்பட்ட தமிழ் அரசாங்க ஊழியருக்கு இந்தச் சந்தர்ப்பத்தை வழங்குவதன் மூலம் பார்லிமென்டில் தமிழ் உத்தியோகத்தர்களின் குரலை எழுப்பமுடியும் என்றும் அவர் கூறினார்.

தமிழ்ப் பகுதியிலுள்ள தேர்தல் தொகுதி ஒன்றிலிருந்து அரசாங்க உத்தியோகத்தர் ஒருவரைத் தெரிவுசெய்யும் யோசனையை தமிழரசுக் கட்சியினர் விரைவில் பரிசீலனை செய்யலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. திரு கே. ஜெயக்கொடியின் இந்த யோசனைக்கு பலர் ஆதரவு தெரிவித்துள்ளனராயினும் எந்த தேர்தல் தொகுதியில் சிங்களச்சட்டத்தினால் பாதிக்கப்பட்ட உத்தியோகத்தரைத் தெரிவுசெய்ய முடியும் என்ற பிரச்னை இப்போது உருவாகியுள்ளது.

பொலிஸ் உயர் அதிகாரிகள்வருகை

நல்லூர், திங்கள்

பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் அலுவலகத்தைச் சேர்ந்த இரு உயர் அதிகாரிகள் இவ்வார இறுதியில் யாழ்ப்பாணம் வரவிருக்கிறார்கள்.

பொலிஸ் இலாகா நிர்வாகப் பகுதி பதில் சூப்பிரண்டன்ட் திரு சிரிவர்த்தனவும், வட பிராந்தியத்திற்குப் பொறுப்பான அதிகாரி திரு. எல். ஐ. டி. சில்வாவும் இம்மாதம் 8, 9ந் திகதிகளில் யாழ்ப்பாணம் வருகிறார்கள்.

யாழ்ப்பாணத்திலுள்ள பொலிஸ் அலுவலகங்களையும் இவர்கள் பார்வையிடுவதுடன் பொலிஸ் அதிகாரிகளுடன் பேச்சுக்கள் நடத்துவார்கள். யாழ்ப்பாணத்தில் பொலிஸ் அதிகாரிகளை எதிர்நோக்கியுள்ள பல பிரச்னைகள்பற்றி இவர்கள் ஆராய்வார்கள்.

வடபகுதியைச் சேர்ந்த ஒரு பொலிஸ் அதிகாரிமீது எடுக்கப்பட்ட நடவடிக்கை பற்றியும் ஆராய்வதில் கவனம் செலுத்தலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

காஷ்மீர்

"பிரச்னை தீர்வதற்கு வகுப்புஒற்றுமைஏற்படவேண்டும்

ஷேக் அப்துல்லா கருத்து

புதுடில்லி, மே 3

"காஷ்மீர்ப் பிரச்னை தீர வேண்டுமென்றால் முதலில் இந்து—முஸ்லிம் வகுப்பு ஒற்றுமை உருவாக வேண்டும்" என்று திரு. ஷேக் அப்துல்லா நிருபர்களிடம் தெரிவித்துள்ளார்.

இந்திய உள்துறை மந்திரி திரு. குல்சாரிலால்நந்தா, திரு. ஷேக்அப்துல்லாவைச் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தினார். திரு. நந்தா நிருபர்களிடம் கூறுகையில் காஷ்மீர் மக்கள் மற்றைய இந்திய மக்களுடன் சேர்ந்து வாழ அனுமதிக்கப்பட வேண்டுமென்றும் தாம் ஷேக் அப்துல்லாவிடம் தெரிவித்ததாகச் சொன்னார். காஷ்மீர் இந்தியாவுடன் இணைந்த ஒரு பகுதியென்பதை தாம் திரு. ஷேக் அப்துல்லாவிடம் உறுதிப்படுத்தியதாகவும் கூறினார்.

'திரு. ஷேக்அப்துல்லா முழு ஒத்துழைப்பையும் அளிப்பார் என்பதில் சந்தேகமில்லை. முன்னர் ஆதரவளித்த அவர் காஷ்மீர் பிரச்னையைச் சுமுகமாகத் தீர்க்க உதவி செய்வார் என்பதில் சந்தேகமில்லை" என்றும் திரு. நந்தா கூறினார்

"இரண்டுவருடங்களில் சீனா மீண்டும் இந்தியாவை தாக்கும்"

டி. டி. கே. எச்சரிக்கை

புதுடில்லி, மே 3

1966-ம் ஆண்டில் மீண்டும் இந்தியாமீதுசீனா தாக்குதல் நடத்த முயற்சிக்கலாம் என்று இந்திய நிதிமந்திரி திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரி அறிவித்துள்ளார்.

புதுடில்லியில் நேற்றுமாலை நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில்தான் திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரி தெரிவித்தார்.

"இந்தியாவை சீனா மீண்டும் தாக்கலாம் என்று நான் தவறாகச் சொல்லவில்லை. எனக்குக் கிடைத்த பல தகவல்களையும் சரியான முறையில் ஊகித்தபின்னரே இவ் எச்சரிக்கையை விடுகின்றேன்" என்றும் திரு. கிருஷ்ணமாச்சாரி கூறினார்.

மற்றுமொரு சீனத்தாக்குதலைச் சமாளிக்க இப்பொழுது இந்தியா தயாராகவிருக்கிறது. இந்தியாவின் நான்காவது திட்டம் நிறைவேறும் பட்சத்தில் இந்தியா சுயதேவைப் பூர்த்தியடைந்த ஒரு நாடாகிவிடும் என்றும் அவர் தெரிவித்தார்.

கூட்டரசாங்கம் அமைப்பது சாத்தியமில்லை

கொழும்பு, ஞாயிறு

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியும் இடதுசாரி ஐக்கிய முன்னணியும் இணைந்து கூட்டரசாங்கம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் குறைந்துள்ளதாக அரசியல் வட்டாரங்களில் கருதப்படுகிறது.

மேதினக் கூட்டங்களில் பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்காவும், எம். ஈ. பி. தலைவர் திரு. பிலிப் குணவர்தனவும் மந்திரி மைத்திரிபால சேனநாயக்காவும் நிகழ்த்திய பேச்சுக்களிலிருந்து கூட்டரசாங்கம் அமைக்கும் வாய்ப்பு குறைந்துள்ளதாகவும் கூட்டரசாங்கம் அமைக்கப்படாவிடில் விரைவில் பார்லிமென்ட் கலைக்கப்பட்டு பொதுத்தேர்தல் நடைபெறலாமென்றும் அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது.

வடபகுதி மாணவர்களுக்கு இன்றுமுதல் விசேஷ பஸ்சேவை

நல்லூர், திங்கள்

வடபகுதியிலுள்ள கல்லூரிகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு போக்குவரத்து சபை விசேஷ பஸ் சேவைகளை நடத்த ஏற்பாடுகள் செய்துள்ளது. முதலாவது தவணை விடுமுறைக்குப் பின் பாடசாலைகள் மீண்டும் இன்று திறக்கப்படுகின்றன.

தூரத்திலுள்ள பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்கள் நேரத்திற்குப் பாடசாலைக்குச் செல்லமுடியாது கஷ்டப்படுவதைத் தவிர்க்க

(6ம் பக்கம் பார்க்க)

மணிவாக்கு

பிறரைக் குற்றம் குறை கூறுதலைவிட்டு பாராட்டுவதை அடிப்படையாகக் கொண்டு வாழுங்கள். மனிதமனம் அன்புக்குஅடிபணியும். வன்மையை எதிர்க்கும்.

— செயின்ட் பிரான்ஸிஸ் டி சால்ஸ்

ஈழநாடு
EELA NADU
EELA NADU National Tamil Dail, Post Box 49, Iaffna
Telegram. EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு
சித்திரை மீ 22 உ (4-5-64)

பிரதமரின் அழைப்பு

மேதின விழாவிலே பிரதமர் ஸ்ரீமா பண்டாரநாயக்கா பேசுகையில் சமதர்மக் கட்சித் தலைவர்கள் தங்களுடன் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அரசாங்கம் எப்போதும் தொழிலாளர் வர்க்கத் தலைவர்களின் ஆதரவையும் ஒத்துழைப்பையும் நாடியுள்ளதென்றும் ஆனால் பற்பல சமயங்களிலும் அத்தலைமை அந்த ஒத்துழைப்பை அளிக்க முடியாமல் போனது துரதிருஷ்டவசமென்றுவருந்தி பழைய சம்பவங்களையெல்லாம் மறந்து அற்பவேற்றுமைகளைப் பொருட்படுத்தாமல் ஒத்துழைக்க வேண்டுமென்றார்.

இந்த வேண்டுகோள் நிறைவேறுமா? தொழிலாளர் தலைவர்கள் இந்த அரசாங்கத்துடன்ஒத்துழைப்பார்களா? இதுவரை ஏன் அவர்களது ஒத்துழைப்பும் ஆதரவும் இந்த அரசாங்கத்துக்குக் கிடைக்க முடியாமல் போய்விட்டது? அந்த ஒத்துழைப்புக் கிடைக்க என்ன செய்ய வேண்டும்? இவை மிக முக்கிய கேள்விகள். 1960-ம் வருட பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கும் லங்கா சமசமாஜ, கம்யூனிஸ்ட் கட்சிகளுக்குமிடையே தேர்தல் விஷயமாக போட்டியில்லா ஒப்பந்தமேற்பட்டது. தேர்தல் முடிந்து, தங்களைத் தேர்தலில் ஆதரித்த இவ்விரு இடதுசாரிக்கட்சிகளின் ஆதரவையும் ஒத்துழைப்பையும் சுதந்திரக் கட்சி நாடவில்லை. அதுமட்டுமல்ல. மொழி முதலிய முக்கியமான விஷயங்களிலே அவர்களது கருத்துக்களுக்கு நேர்மாறாக நடவடிக்கை எடுக்கப்பட்டது. தேசிய முக்கியம் வாய்ந்த இவ்வித விஷயத்திலே அப்படிப் பிடிவாதம் செய்து அற்பவிஷயத்திலும் விட்டுக் கொடுக்க மறுத்தவர்களுடன் அந்த முற்போக்குவாதிகள் ஒத்துழைக்க முடியாமற் போயிற்றெனின் அந்தக் குற்றம் யாருடையது?

மொழிஉரிமை, குடியேறிய தொழிலாளரின் பிரஜா உரிமை முதலிய விஷயங்களை பரந்த அடிப்படையிலே எவ்விதம் தீர்க்க வேண்டுமென்று சர்வதேச ஸ்தாபனமும் சோஷலிஸ்ட் நாடுகளும் வழிகாட்டியுள்ளன. அந்தவழியைமதித்து, இப்போது ஜனநாயகசமதர்மம் பேசும் சுதந்திரக்கட்சி நடந்திருப்பின் நாட்டின் அரசியல் நிலையே இன்று முற்றிலும் வேறுவிதமாக இருந்திருக்கும். நாட்டிலுள்ள பல சமூகங்களிடையேயும் ஒற்றுமையும் ஒத்துழைப்பும இருக்க வேண்டியது சமதர்ம வெற்றிக்குஅடிப்படையாகும். துரதிருஷ்டவசமாக அந்த ஒற்றுமை இங்கு இல்லை. சமதர்மக் கட்சிகள் எதிர்த்தும் எச்சரித்தும்தீர்க்கதரிசனமற்ற பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அந்தத் தவறுகள் இன்றுவரை திருத்தப்படவில்லை.

இப்போதாவது அந்தத் தவறுகளைத் திருத்திக் கொள்ள ஸ்ரீமாவின் அரசாங்கம் தயாரா? இதுபற்றி ஒரு வார்த்தையும் அவர் கூறவில்லை. கூட்டு அரசாங்கத்தை ஆதரித்து யாழ்ப்பாணக்கூட்டத்தில் பேசியடாக்டர்என்.எம். பெரேரே சமதர்மக் கட்சியால் தான் மொழிப்பிரச்னையையும் மலைநாட்டுத் தொழிலாளரின் பிரஜா உரிமைப் பிரச்னையையும் தீர்க்க முடியுமென்று கூறினார். இப்பிரச்னைகள் தீர்ந்தால்தான் நாட்டு மக்களிடையே ஒற்றுமை ஏற்பட்டு நாடும் முன்னேற முடியுமென்பதை பிரதமர் ஸ்ரீமாவும் உணர்ந்து அவ்விதமே கூறியுமிருக்கின்றார். அனுபவமின்மையாலும் உணர்ச்சிவேகத்தினாலும் பல அரசியல்தவறுகள் நடந்திருக்கலாம். ஆனால் தவறை உணர்ந்தபின் அதைத் திருத்திக் கொள்ள உடனடியான முயற்சிகளைச் செய்வதே அறிவுடமையாகும். இதற்கு ஸ்ரீமாவின் கட்சி தயாராக இருக்கிறதா என்ற முக்கிய கேள்விக்கான பதிலிலேயே கூட்டு அராசங்க அமைப்பும் நாட்டின் எதிர்கால தலைவிதியும் பெரிதும் அடங்கி இருக்கும்.

கூட்டு அரசாங்கம் ஏற்பட முடியுமா?

பிரதமர் பேச்சும், பிலிப்பின் ஏமாற்றமும்

நாடெங்கும் மேதினத் திருவிழா: தொழிலாளர் உற்சாகம் மொழிவழித் தொழிற் சங்கம்

— அரசியல் நிருபர் —

மே தினம் இதுவரை என்றுமே இல்லாதபடி இம்முறை மிக உற்சாகத்துடன் நாடெங்கும் பல இடங்களிலும் நடைபெற்றுள்ளது. கொழும்பில் மட்டுமல்ல யாழ்ப்பாணமும் திருவிழாக் கோலமாக இருந்தது. மிக நீண்ட ஊர்வலங்கள் பெரிய பெரிய கூட்டங்கள் தொழிலாளர் சமூகத்திடையே எவ்வளவு விழிப்பும் உற்சாகமும் ஏற்பட்டுள்ளதென்பதற்கு இது நல்லதோர் அறிகுறியாகும்.

ஒவ்வொரு அரசியல் கட்சியும் தனித்தனியே இவ்விழாக் கொண்டாடி கூட்டங்கள் கூட்டி தீர்மானங்கள் நிறைவேற்றின. இடதுசாரி ஐக்கிய முன்னணியின் ஆதரவிலே முதல் முதலாக கொழும்பு கால்பேஸ் திடலில் நடைபெற்ற மேதினக் கூட்டம் மிகப் பெரிதாம். பிலிப் குணவர்த்தன இக்கூட்டத்தில் தாம் பிரதமரின் அழைப்பை ஏற்று நுவரேலியாவில் சந்தித்துப் பேசிய ரகசியத்தைவெளியிட்டார். "பிற்போக்காளராகிய" வி. பி. டி. சில்வா, மைத்திரிபால சேனநாயக இவ்விரு மந்திரிகளையும் நீக்கிவிடத் தாம் தயாராக இருப்பதாக பிரதமமந்திரி அவரிடம் அன்று தெளிவாகக் கூறினாராம். ஆனால் இப்போது அந்த நிலை மாறிவிட்டதைக்காணத் தமக்கு வியப்பாக இருப்பதாக பிலிப் ஏமாற்றத்துடன் தெரிவித்தார்.

●

பிரதமர் சுதந்திர சதுக்கத்தில் நடந்த பெரிய கூட்டத்தில் பேசுகையில், "எனது மந்திரி சபையின் அமைப்பைப் பற்றிய விஷயம் என்னை, என்னையே மட்டும் பொறுத்தது. என் கட்சியிலோ, அல்லது வெளியிலோ உள்ள வேறு யாருக்கும், யாரை நான் என் அரசாங்கத்தில் சேர்த்துக்கொள்ளலாம். யாரைச் சேர்த்துக்கொள்ளக் கூடாது என்று எனக்குக்கூற உரிமைகிடையாது. என்று அழுத்தம் திருத்தமாகக் கூறியதுடன், தமது அரசாங்கததிலுள்ள யாரும் பிற்போக்கான வர்க்கமென்று கூறுவதையும் அவர் நம்பவில்லை. இதுபற்றி பத்திரிகைகளில் நடக்கும் வாககுவாதத்துக்குச் செவிசாய்க்க வேண்டாமென்றும் தம் கட்சியினரை எச்சரித்தார்.

●

வர்த்தகக் கைத்தொழில் மந்திரி மைத்திரிபால சேனநாயகா வாலப்பனையிலே மே தினக் கூட்டத்தில் பேசுகையில் பிலிப் குணவர்த்தனவுக்கு மிகக் காரசாரமாகப் பதிலளித்தார்.

பண்டாரநாயகாவை பிரதம மந்திரி பதவியிலிருந்து தள்ளிவிடவேண்டுமென்று அவரது மந்திரிசபையில் இருக்கையிலேயே பிலிப் முயன்றார். ஆனால் நாங்கள் (வி. பி டி. சில்வாவும் தாமும்) அங்கு இருந்ததால் அது முடியவில்லை, இப்போது ஸ்ரீமாவோவை பிரதமர் பதவியிலிருந்து நீக்கவே, இம்மந்திரி சபையில் சேரவிரும்புகிறார். ஆனால் நாங்கள் இருவரும் இருக்கும்வரை அவரால் அது முடியாதென்பது அவருக்கே தெரியும்" என்றும் 1960-ம் வருடம் ஸ்ரீ டட்லியை பிரதமர் பதவியிலிருந்து நீக்கவே, யு. என். பி. மந்திரிசபையில் சேரத் தாம் விரும்பியதாக அவரே சென்ற வாரம் ஒரு கூட்டத்தில் பகிரங்கமாக ஒப்புக் கொண்டாரென்றும் அம்பலப்படுத்தினார்.

●

இதே சமயம கூட்டு அரசாங்கத்தில் இடதுசாரித் தலைவர்கள் சேரப்படாதென்றும் ஸ்ரீலங்கா சுதந்தரக் கட்சி மிகவும் பிற்போக்கானதென்றும் இலங்கை வர்த்தக ஊழியர் சங்கம் தனியே நடத்திய மேதினக்கூட்டத்திலே பாலா தம்பு முழக்கம் செய்தார்.

சுதந்திரக்கட்சியும் இடதுசாரி ஐக்கிய முன்னணியும் கூட்டுசேர முற்படுவதை மற்றொரு மேதினக் கூட்டத்திலே சண்முகதாஸன் எதிர்த்தார். தொழிலாளர் புரட்சியைக் கண்டு பயந்தே இவ்விதம் இவர் முயற்சிப்பதாயும், பீட்டர் கெனமன் போன்ற சிலரது பேச்சைக்கேட்டு தொழிலாளர் ஏமாந்துவிடக்கூடாதென்றும் அவர் எச்சரித்தார்.

பீட்டர் கெனமன் யாழ்ப்பாணம் முற்றவெளிக் கூட்டத்தில் பேசுகையில் சுதந்தரக் கட்சியின் 'மத்திய வழி'க் கொள்கை தோற்றுவிட்டதாயும், அந்த பாதையின் முடிவுக்கு அக்கட்சி வந்துவிட்டதாகவும் கூறினாரல்லவா? இதை ஸ்ரீமாவோ, சுதந்தர சதுக்கத்தில் பேசுகையில் மறுத்தார். சுதந்தரக்கட்சி மத்திய வழியைததான் இனியும் தொடர்ந்து பின்பற்றுமென்றும் அறிவுறுத்தினார் அவர்.

●

கொழும்பு ஹைட்பார்க்கிலே, யு. என். பி. நடத்திய கூட்டத்தில் டட்லி சேனநாயகா, சுதந்தரக் கட்சியையும் இ. ஐ முன்னணியையும் கண்டித்தார். இன்று நாடுள்ள கேவல நிலைக்கு இவ்விரு கட்சிகளும்தான் காரணமென்றும் நாட்டில் சர்வாதிகார ஆட்சி ஏற்படுத்தவே, இ. ஐ. முன்னணி கூட்டு அரசாங்கத்தில் சேரமுற்படுவதாயும் எச்சரித்தார். வர்கக வேற்றுமையை வளர்த்து இரத்தக் களறி ஏற்படுத்தி சர்வாதிகார ஆட்சியை ஏற்படுத்துவதே இ. ஐ. மு.வின் நோக்கமென்றார்.

யு. என். பி. யுடன் கூட்டு அரசாங்கம் ஏற்படுத்தலாமென்று பிலிப் ஏற்கெனவே தம்மிடம் யோசனை கூறியதாயும் தெரிவித்து இடதுசாரித் தலைவர்களிடம் அதிகாரம கிடைத்தால் நாட்டில் ஜனநாயக ஆட்சிக்கு முற்றுப்புள்ளி ஏற்பட்டுவிடுமென்றும். யு. என். பி. கட்சிக்கு பொதுமக்களின் ஆதரவு அமோகமாக இருக்கிறதென்றும், தாங்கள் பிற்போககாளராயின் தங்களை ஆதரித்த பொதுமக்களும் பிற்போக்காளராவரென்றும சொன்னார்.

* * *

இந்த மேதினக் கூட்டங்களில் நடந்த பேச்சுக்களில் பலவும் கூட்டு அரசாங்கத்தைப் பற்றிய பேச்சு பெரிதும் அடிபட்டது. இவ்வளவு தீவிர வேற்றுமைகளுக்கிடையே கூட்டு அரசாங்கம் ஏற்பட முடியுமா? என்ற முக்கிய கேள்வி எழுகின்றது.

பிரதம மந்திரி பேசுகையில் இடதுசாரித் தலைவர்களின் ஒத்துழைப்பை வேண்டியுள்ளார். அவர்கள் ஒத்துழைப்பரென்ற நம்பிக்கை இன்னும் பிரதமருக்கு இருக்கிறதா?

"பிற்போக்கு" மந்திரிகள் யாரும் இல்லை என்று பிரதமர் சொன்னாலும், தம் மந்திரி சபையில் எவ்வித மாற்றமும் செய்ய நமக்கே பூரண அதிகாரமுண்டென்றும் வேறு யாருக்கும் இதில் தலையிட உரிமையில்லை என்றும் கூறியதிலிருந்து கூட்டு அரசாங்கம் ஏற்பட அவர் எவ்வித மாறுதலும் செய்வது சாத்தியமென்றும ஏற்படுகின்றது.

இதேசமயம் இடதுசாரி ஐக்கியமுன்னணி தங்களுடன் ஒத்துழைத்தாலும் ஒத்துழைக்காவிடினும் சுதந்திரக்கட்சி அரசாங்க நிர்வாகத்தை தொடர்ந்து நடத்துமென்றும் அதற்கான பலம் தங்களுக்கு இருப்பதாகவும் சொல்லி இருக்கின்றார் பிரதமர்.

இ. ஐ. மு. வின் ஒத்துழைப்பை பிரதமர் வேண்டினாலும், எவ்வளவு தூரம் அவர்களுக்கு விட்டுக்கொடுக்க பிரதமர் தயார் என்பதைத் தெரிவிக்கவில்லை. மேலும் இடதுசாரிக் கட்சிகளுக்குள்ளாக இப்போது பிரதமர்பிளவுபடுத்தியுள்ளார். கூட்டு அரசாங்கம் ஏற்படாவிடினும், பிரதமர் எப்படியும் பூரண காலமும் பதவியிலிருக்க உறுதிகொண்டிருப்பது அவரது பேச்சிலிருந்து தெரிகிறது. தமது நிலை எவ்வகையிலும் பலவீனமானதென்பதை அவர் காட்டிக்கொள்ளவில்லை.

கூட்டு அரசாங்கம் ஏற்படுமா? என்ற கேள்விக்குத் தெளிவான பதில் இப்பேச்சுக்களிலிருந்து கிடைக்கவில்லை. பிலிப் விலகினால், அவ்வித அரசாங்கம் அமைப்பது சாத்தியம் என்று கூறப்படுகிறது. ஆனால் பிலிப் விலகுவாரா? இ. ஐ. முன்னணியைப் பிரிக்க முடியாதென்று பிலிப்

(6-ம் பக்கம் பார்க்க)

நாட்டிலும் நகரிலும்

உடல் எரிவைத் தணிப்பதற்காக நேற்று முன்தினம் கீரிமலைக்குச் சென்றபோது, அதிகாலை ஏழு மணிக்கே கேணி நிரம்பியிருந்தது பெரிய ஆச்சரியமாகவிருந்தது. வெளியே மூன்று 'டூரிங்' பஸ் வண்டிகள் நின்றன. குளிக்க வந்தவர்களில் முக்கால்வாசிப் பேர் சிங்கள யாத்திரீகர்கள். நாகதீபத்துக்கு ஸ்தல யாத்திரை வந்தவர்கள் கீரிமலைக்கும் வந்திருக்கிறார்கள்.

உல்லாசப் பிரயாணிகள் வந்து தங்கியிருந்து கீரிமலையின் சுவாத்தியத்தை அநுபவித்துப் போவதற்கு எவ்வளவோ செய்யலாம். ஐரோப்பா முதலிய இடங்களில் கீரிமலையைப் போல ஓர் இடம் இருந்தால் அதைச் சும்மா விடுவார்களா? பிரயாணிகள் தங்குமிடங்களிலும், ஹோட்டல்களிலும் களியாட்ட இடங்களுமாக எங்கும் ஒரே கோலாகலமாயிருக்கும். கோடிஸ்வரர்கள் வந்து பணத்தை இறைத்துவிட்டுப் போவார்கள். பிரான்சிலுள்ள றிவேனாவிலும் அமெரிக்காவிலுள்ள மியாமி கடற்கரையிலும் நாளொன்றுக்கு பல்லாயிரக் கணக்கான யாத்திரீகர்கள் சென்று உல்லாசமாகப் பொழுதைப் போக்கி அங்குள்ளவர்களுக்கு நிறைய வருமானத்தைக் கொடுத்துவிட்டுப் போகிறார்கள்.

அரசாங்கம் நினைத்தால் கீரிமலையையும் ஒரு சிறந்த 'டூரிஸ்ட்' விடுதி ஆக்கலாம். இலங்கைக்கு அநேகமாக ஒவ்வொரு நாளும் வெளியூர்களிலிருந்து எத்தனையோ உல்லாசப் பிரயாணிகள் வந்து சேருகிறார்கள். இம்மரகதத் தீவின் எழிலைப் பருகுவதற்கும் அதன் சுவாத்தியத்தை அனுபவிப்பதற்கும் அமெரிக்கரும ஆங்கிலேயரும் பிறரும் கைநிறையப் பணம் சேர்த்துக் கொண்டு வருகிறார்கள். ஆனால் அவர்கள் பார்ப்பதெல்லாம் தெகிவலை மிருகக் காட்சிச் சாலையையும் பொலன்னறுவை இடிந்த கோட்டைகளையும் தான். கீரிமலை என்றோர் இடம் இருக்கிறது. அங்கே தென் பசுபிக் தீவுகளின் மணம் வீசுகிறது. உடல் வலியைப் போக்கும் உத்தமமான நீர்ச்சுனை உண்டு என்று அவர்களுக்குத் தெரியாது. அதைச் சொல்லிக் கொடுப்பதற்கும் ஆள் இல்லை. இவர்களில் சிலரை நுவரேலியாவுக்கு அழைத்துக் கொண்டு போகிறார்கள். குளிர்ந்த ஐரோப்பிய நாடுகளிலிருந்து வருபவர்களுக்கு நுவரேலியாவில் என்ன புதுமை?

காங்கேசன்துறை துறைமுகத்தில் பிரயாணிக் கப்பல்கள் வந்து போவதற்கு வசதி உண்டானால் எத்தனையோ பிரயாணிகள் நேரே இங்கு வந்து இறங்கலாம். இத்துறைமுகத்தை அபிவிருத்தி செய்ய இன்றுவரை அரசாங்கம் நினைக்கவில்லை. ஆனால் கொழும்பிலிருந்து காங்கேசன்துறை வருதற்கு விமானங்கள் நிறைய இருக்கின்றன. கொழும்புக்கு வரும் உல்லாசப் பிரயாணிகளை கீரிமலைக்கும் அழைத்து வருவதற்கு 'டூரிஸ்ட் பியூரோ' ஏற்பாடுகள் செய்யக்கூடும். சுவரொட்டிகள், துண்டுப்பிரசுரங்கள் மூலம் கீரிமலையைப் பற்றி பிரசாரம் செய்யலாம். இவையொன்றும் நடப்பதில்லை.

வடமாகாணத்தில் ஒரு கீரிமலை இருப்பது போல் கீழ் மாகாணத்தில்ஒரு கன்னியாய இருக்கிறது. அங்குள்ள வெந்நீர் கிணறுகள் பற்றி தென்னிலங்கை மக்கள் பலருக்கே தெரியமாட்டாது. யுத்தகாலத்தில் சீனன் வாடியிலிருந்த வெள்ளைக்கார இராணுவத்தினர் தினமும் கன்னியாயுக்குப் போய் நீராடி வருவார்களாம். கோழிமுட்டை அவியக்கூடிய

(4-ம் கலம்பார்க்க)

(5-ம் கலத் தொடர்ச்சி)

அளவு சூடு அங்குள்ள ஏழு கிணறுகளில் ஒன்றில் இருக்கிறது.

இப்படியான இடங்களுக்கு வெளிநாட்டுப் பிரயாணிகளை வரவழைத்து அதன் மூலம் வருமானம்பெறக்கூடிய வழிவகைகளை டூரிஸ்ட் பியூரோவும், சம்பந்தப்பட்ட உள்ளூர் அரசாட்சி சபைகளும் பரிசீலனை செய்தால், இன்று மிகவும் தேவைப்படும் வெளியூர்ப் பணம் கிடைக்கலாமல்லவா?

— வழிப்போக்கன்

லாவோஸ்

வியன்டைன், மே 3

லாவோஸில் கூட்டு அரசாங்கம் கடமையாற்றுவதற்கான இறுதி முயற்சியில் தம்முடன் சேரும்படி சகல கோஷ்டிகளையும் லாவோஸ் நடுநிலைப் பிரதமர் இளவரசர் சுவர்ணபூமா ஓர் அறிக்கை மூலம் கேட்டுள்ளார்.

அண்மையில் லாவோஸில் வலதுசாரி படையினர் மேற்கொண்ட புரட்சியை அமெரிக்காவும் பிரிட்டனும் கூட்டாகக் கண்டித்துள்ளன.

கிராமத்தையே எரித்தனர்!

இம்பால், மே 3

மணிப்பூரின் உபபகுதியிலுள்ள புசலோங்குக்கு அருகிலுள்ள நாகர்களின் கிராமமொன்றை பகைநாகர்கள் முற்றாக எரித்துவிட்டனரென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சிலகிராமங்களில் பகைநாகர்கள் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியதாகவும் செய்தி வெளியாகியுள்ளது. சேதவிபரம் தெரியவில்லை.

ஜாக்குலின் விசாரிக்கப்படுவார்

வாஷிங்டன், மே 3

காலம்சென்ற அமெரிக்க அதிபர் ஜோன் எப். கென்னடியின் கொலைசம்பந்தமாக விசாரணைகள் நடத்திவரும் விசேஷ கமிஷனால் திருமதி ஜாக்குலின் கென்னடிவிசாரிக்கப்படுவார் என்று விசாரணைக்கமிஷன் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் 35-வது அதிபர் திரு. ஜோன் எவ் கென்னடி கடந்த வருடம் நவம்பர் மாதத்தில் 24 வயதுள்ள இளைஞனை ஒஸ்வோல்ட் என்பவனால் சுட்டுக் கொலை செய்யப்பட்டதும் இரண்டு நாட்களுக்குள் ஒஸ்வோல்ட், ஜாக்ரூபி என்ற ஹோட்டல் சொந்தக்காரனால் கொலைசெய்யப்பட்டதும் ஜாக்ரூபிக்கு இப்பொழுது மரண தண்டனை விதிக்கப்பட்டிருப்பதும் வாசகர்களுக்கு ஞாபகமிருக்கலாம்.

அமெரிக்க அதிபர் கென்னடியின் கொலைக்கான காரணங்களைக் கண்டுபிடிக்கும் பொருட்டு நியமிக்கப்பட்ட விசேஷ விசாரணைக்கமிஷன் தற்பொழுது தொடர்ச்சியாக பல விசாரணைகளை நடத்தி வருகிறது.

கோபாலன் மறுப்பு

ஆலப்புழை, மே 3

லோகசபை கம்யூனிஸ்ட் கட்சித் தலைமைப் பதவியிலிருந்து தாம் ராஜினமாச் செய்யப் போவதில்லையென்று திரு. ஏ. கே. கோபாலன் அறிவித்துள்ளார்.

கட்சியிலிருந்து தற்காலிகமாக நீக்கப்பட்ட 32 பேரில் திரு. கோபாலனும் ஒருவர். லோகசபைக் கட்சித்தலைமைப் பதவியிலிருந்து ராஜினமாச் செய்ய வேண்டும் என்று யோசனை தெரிவித்து திரு. டாங்கேயிடமிருந்து கடிதம் வந்திருப்பதை அவர் ஊர்ஜிதம் செய்தார்.

தீவிபத்து

ரூ. 10லட்சம் நாசம்!

குஜராத், மே 3

கூட்டுறவு ஜின்னிங்தொழிற்சாலையில் ஏற்பட்ட தீவிபத்து காரணமாக 10 லட்சம் பெறுமான பஞ்சு சாம்பலாயின. தீயணைக்கும் படையினர் சுமார் இரண்டுமணி நேரம்வரை தீயுடன் போராடி ஓரளவாக தீயை அணைத்தனர்.

தீவிபத்துக்கான காரணம் இன்னும் அறிவிக்கப்படவில்லை.

பொறுமைக்கும் எல்லையுண்டு

திருச்சி, மே 3

திருச்சி நகரசபை அங்கத்தவரொருவரை ஆறு பெண்கள் தண்ணீர்க் குடத்துடன் தாக்கியதாக நகரசபைக் கூட்டத்தில் புகார் தெரிவிக்கப்பட்டது.

பெண்களினால் தாக்கப்பட்ட 25-வது வட்டார அங்கத்தவரான திரு. முகம்மதுராவுத்தரே மேற்கண்ட புகாரைச் சபைக்கூட்டத்தில் தெரிவித்தார்.

தம்முடைய தொகுதியில், தண்ணீர்ப்பஞ்சம் கடுமையாக இருப்பதாகவும் தண்ணீர் விநியோகிக்கும் லாரி தம்முடைய தொகுதிக்கு வந்தபொழுது தண்ணீர் எடுப்பதில் பெண்களுக்கிடையே சண்டை ஏற்பட்டதென்றும் அமைதியை நிலைநாட்டத் தாம் சென்றபொழுது அப்பெண்கள் தங்களது தண்ணீர்க்குடங்களால் தம்மைத் தாக்கியதாகவும் அவர் கூறினர்.

இவ்விஷயத்தைக் கவனிக்க தாம் உடனடியாக நடவடிக்கையெடுப்பதாக நகரசபைத் தலைவர் வாக்குறுதியளித்தார்.

டில்லியில் பார்த்தசாரதி

புதுடில்லி, மே 3

பாகிஸ்தானிலுள்ள இந்திய ஹைகமிஷனர் திரு ஜி. பார்த்தசாரதி இங்கு வந்து சேர்ந்தார். மத்திய அரசாங்கத்தின் அழைப்பின்மீது அவசர ஆலோசனைக்காக அவர் இங்கு வந்துள்ளார்.

ஷேக் அப்துல்லா

புதுடில்லி, மே 3

தற்பொழுது புதுடில்லியிலிருக்கும் முன்னாள் காஷ்மீர் பிரதமர் திரு ஷேக் அப்துல்லா, சுதந்திரக் கட்சித் தலைவர் திரு. மாஸானியைச் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தினர். இவர்களின் பேச்சுக்கள் பிரதமரின் இல்லத்தில் சுமார் 45 நிமிட நேரம்வரை நடைபெற்றன.

திரு. ஷேக் அப்துல்லா, வினோபாஜியைச் சந்திப்பதற்காக நாளை வார்தாவுக்குப் புறப்படுவார் திரு. ஷேக் அப்துல்லாவுடன் திரு. ஜெயபிரகாஷ நாராயணும் செல்வார். திரு. ஷேக் அபதுல்லா மீண்டும் செவ்வாய்கிழமை பிரதமருடன் பேச்சு நடத்துவார்.

தொழில்களுக்கு

கடன்வழங்க ஒரு ஸ்தாபனம்

புதுடில்லி, மே 3

தொழில் ஸ்தாபனங்களுக்கு கடன் வசதி அளிக்கும் வகையில் புதிய ஸ்தாபனமொன்று அமைக்கப் படவிருக்கிறது.

ரிசர்வ் வங்கியின் துணை ஸ்தாபனமாகவும் அதன் உடமையாகவும் விளங்கக் கூடிய இந்தியத் தொழில் அபிவிருத்தி வங்கி என்ற பெயரில் இந்த ஸ்தாபனம் நிறுவப்படும். இது சம்பந்தமான மசோதாவொன்று லோகசபையில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்த ஸ்தாபனம் ரூ. 50 கோடி அங்கீகரிக்கப்பட்ட மூலதனத்துடன் ஆரம்பிக்கப்படுமென்றும் பின்னர் அவசியமானல் இதை ரூ. 100 கோடியாக அதிகரித்துக் கொள்ளலாமென்றும் நிதி மந்திரி திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரி தெரிவித்தார்.

பரிதாப மரணம்

திருத்தணி, மே 3

நாகலாபுரத்திலிருந்து திருத்தணிக்கு வந்து கொண்டிருந்த பஸ்ஸுக்கு இரு குழந்தைகள் பலியாகியுள்ளனர். பஸ்சாரதி தலைமறைவாக விருக்கின்றார்.

30 தி. மு. க. கைது

வில்லுப்புரம், மே 3

வில்லுப்புரம் உப-தபாற் கந்தோருக்கு முன்பாக ஹிந்திக்கு எதிர்ப்பு தெரிவித்து மறியல் செய்த திருவாளர்கள் எம். சண்முகம், எம். எல். ஏ, வி. தேவநாதன், வேணுகோபால், பாண்டியன், ரத்தினம், கிருஷ்ணமூர்த்தி தனஞ்சய, வீரமுத்து, கோவிந்தசாமி, நடராஜன், ஐயாக்கண்ணு சாமிக்கண்ணு, புருஷோத்தமன், பாண்டுரங்கன் ரத்தினவேலு ஆகிய 15 தி. மு. க. தொண்டர்கள் வில்லுப்புரம் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டனர்.

திருக்கோயிலூரில், தபாற்கந்தோருக்கு கடமையாற்றச் சென்ற ஊழியர்களை தடுத்த குற்றத்துக்காக திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த 15 பேர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு, பாதுகாவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

ஜோன்ஸனின் ஆலோசகர்

வாஷிங்டன், மே 3

பிரபல்யம் வாய்ந்த வாஷிங்டன் பத்திரிகையாளர் திரு கச்ளஸ் கட்டர், வெளிநாட்டுக் கொள்கை மற்றும் விஷயங்கள் குறித்து அமெரிக்க அதிபர் ஜோன்ஸனுக்கு ஆலோசனை கூற நியமிக்கப்பட்டுள்ளார் என்று வெள்ளைமாளிகை அறிவித்துள்ளது.

மலை உச்சியில் மா — ஸே — துங் சிலை

பீக்கிங், மே 3

நேபாள-திபெத எல்லையிலுள்ள 26,000 அடி உயரமுள்ள மலையில் ஏறி வெற்றி கண்ட 10 சீனர்கள் மலையின் உச்சியில் சீனத்தலைவர் மாஸே-துங்கின் சிலையொன்றை நிறுவிவிட்டு திரும்பியுள்ளனர்,

சீனர்கள் ஏறிய இம்மலை, உலகிலுள்ள உயர்ந்த மலைகளில் ஒன்றென்று குறிப்பிடத்தக்கது.

மன்னரைக் கொல்லச் சதி

லண்டன், மே 3

ஜோர்டான் மன்னர் ஹுஸைனைக் கொலைசெய்ய மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளைத் தொடர்ந்து ஸ்கொத்லாந்து விசேஷ பொலிஸார் தங்களது பந்தோபஸ்து வேலைகளை அதிகரித்துள்ளனர்.

மன்னர் ஹுஸைன், 4 நாள் விஜயம் செய்யும்பொருட்டு கடந்த வியாழக்கிழமை நியுயோர்க் வந்து சேர்ந்தார். சிக்காக்கோ பொலிஸார், அமெரிக்க அரசாங்க காரியாலய மூலமாகக் கொடுத்த ஒரு தகவலைத் தொடர்ந்து பந்தோபஸ்து வேலைகள் மும்முரப்படுத்தப்பட்டன.

மே தின கொலை

லிஸ்பன், மே 3

இங்கு நடைபெற்ற மே தின ஆர்ப்பாட்ட நிகழ்ச்சிகளின் போது, ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார். ஒருவர் காயமடைந்தார்.

17 பேர் மூழ்கினர்

சிசிலி, மே 3

இயந்ரரப்படகொன்று நீரில் மூழ்கியதில், 17, 18 வயதுள்ள 16 பேரும் ஒரு மதகுருவும் மாண்டனர்.

'சொல்லொன்று செயல் வேறு'

பொ.சே.தொ. மேதின விழாவில் பேச்சு

யாழ்ப்பாணம், திங்கள்

"இலங்கை தொழிற்சங்கச் சம்மேளனங்களின் தலைவர்களிற் சிலர் உலக தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்" என்ற கோஷத்துக்கு விரோதமாக நடந்தும் பேசியும் வருகிறார்கள். தமது சொந்த நலனுக்காகத் தொழிற்சங்கங்களின் நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவிப்பதும்தொழிலாளரைப் பிரித்துவைப்பதுமான செயல்களில் இவர்கள் ஈடுபடுவது வெட்கமும் வேதனையும் தருவதாகும். இத்தகைய தலைவர்கள் ஒழுங்காக நடந்துகொள்ளாவிட்டால் தொழிற்சங்கத் தலைமைப்பீடத்திலிருந்து விரட்டப்படுவது நிச்சயம் என்று தொழிலாளர்கள் இவர்களுக்கு எச்சரிக்கை செய்ய வேண்டும் என்று பொதுச்சேவைத் தொழிற்சங்க சம்மேளனத் தலைவர்திரு. ஏ. சி கந்தசாமி விடுத்துள்ள மேதனச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

திரு பி.ஜே.எச்.ஏ. விக்னராஜா பேசுகையில் பதினன்கு தொழிற்சங்கங்களினல் நிறைவேற்றப்பட்ட 21 கோரிக்கைகளையும் நிச்சயம் நிறைவேற்றியே தீருவோம் என்றுகூறிய டாக்டர் என். எம். பெரேரா தொழிலாளர்களைக் கைவிட்டு நிறைவேற்றப்பட வேண்டிய 21 கோரிக்கைகளையும் பாராமுகமாகக் கருதுவது மிகவும் வேதனையளிக்கக்கூடிய ஒரு செயலாகும் என்று குறிப்பிட்டார்.

"யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் நடைபெற்ற கூட்டத்திலும் டாக்டர் என். எம். பெரேரா இக்கோரிக்கைகள் குறித்து கருத்துத் தெரிவித்திருந்தார். 21 கோரிக்கைகளும் நிறைவேற்றப் பாடுபடுவோம் என்று இங்கும் அறிவித்த இவர் இப்பொழுது எதிர்மாறாக நடந்து கொள்வது தொழிற்சங்கங்களுக்கே மிகுந்த அவமானத்தைக் கொடுத்துள்ளது என்றும் திரு. விக்னராஜா கூறினர்.

"தொழிற்சங்கங்களில் அரசியல்வாதிகள் ஈடுபடக்கூடாது. தொழிலாளர்கள் எப்பொழுதும் தொழிற்சங்கம் மூலம்தான் தங்களது கோரிக்கைகளைப் பெற முடியும். பதவிமோகம் பிடித்த சிலரின் சுயநலக் கொள்கைகளினல் தொழிலாளர்கள் வெற்றுப் பேச்சைக் கேட்டு ஏமாற வேண்டிய நிலை இப்பொழுது உருவாகியுள்ளதென்றும் அவர் குறிப்பிட்டார்.

சம்மேளனக் காரியதரிசி திரு. சு. துரைராசா பேசுகையில் 21 கோரிக்கைகளையும் நிறைவேற்றும்படி தாய்ச்சங்கத்தைக் கேட்டுக் கொள்கின்றோம் என்றும் தாய்ச்சங்கம் அரசாங்கத்தை இவ்விஷயத்தில் வற்புறுத்த வேண்டும் என்றும் கூறினர்.

திருவாளர்கள் எஸ். ஏ. ஆர். வேதனுபகம், மா. ஐயனா, வே. குமாரசாமி, வேலும் மயிலும், க. செல்லத்துரை ஆகியோரும் உரைநிகழ்த்தினர்.

காஷ்மீர் பிரச்னை

நியுயோர்க, மே 3

செவ்வாய்க்கிழமை கூடும் ஐக்கிய நாடுகள் பந்தோபஸ்து சபை காஷ்மீர் பிரச்னை குறித்து மீண்டும் விவாதிக்கும். இந்தியாவின் சார்பில், கல்விமந்திரி திரு. சாக்ளாவும் பாகிஸதான் சார்பில் வெளிவிவகார மந்திரி திரு. பூட்டோவும் இக் கூட்டத்தில் கலந்துகொள்வார்கள்.

நியூயோர்க்குக்கு புறப்படுமுன்னர் பாலம் விமானநிலையத்தில் இந்திய கல்விமந்திரி திரு. சாக்ளா, நிருபர்கள் மத்தியிற் பேசுகையில், காஷ்மீர் இந்தியாவுடன் இணைந்த ஒரு பகுதியென்றும் ஐ. நா. சட்டத்திலும் இதைத்தான் தாம் மீண்டும் வலியுறுத்தப் போவதாகவும் கூறினர்.

காஷ்மீர் பிரச்னை குறித்து விவாதிப்பதற்கு இது உகந்த தருணமல்லவென்றும் இந்தியாவுடன் இணைந்த ஒரு பகுதியைப் பற்றி விவாதிப்பதில் பலனெதுவுமில்லையென்றும் அவர் கூறினர்.

வால்மீகி ராமாயண வசனம்

தமிழில் வெளியாகிறது

சென்னை, மே. 3

காஞ்சி காமகோடி பீடாதிபதிகளின் அனுக்கிரகத்துடன் ஸம்ஸ்கிருத வித்யாஸமிதியின் ஆதரவில், கீர்த்தனசாரிய சி. ஆர். ஸ்ரீநிவாசய்யங்கார் இயற்றிப் பதிப்பித்துள்ள வால்மீகி ராமாயண வசனத்தின் புதிய விசேஷ பதிப்பொன்றை ஸ்ரீ சி பி. ராமஸ்வாமி ஐய்யர் இம்மாதம் 7-ந் திகதி வெளியிட ஏற்பாடாகியுள்ளது.

காணிகளுக்கு நஷ்டஈடு

நல்லூர், திங்கள்

காங்கேசன்துறை சிமிந்தித் தொழிற்சாலை விஸ்தரிப்புக்காக அரசினரால் சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்கு விரைவில் நஷ்டஈடு வழங்கப்படவிருக்கிறது. சுவீகரிக்கப்பட்ட காணிகளை அரசாங்க விலை மதிப்பாளர் பகுதி அதிகாரி ஒருவர் பார்வையிட்டார், மூன்ருவது தடவையாக இக்காணிகள் விலை மதிப்பாளரினல் பார்வையிடப்பட்டுள்ளன.

ஜூலை மாதம் 16-ம் திகதிக்கு முன் சுவீகரிக்கப்பட்ட காணிகளிலுள்ளவர்கள் வெளியேறும்படி கேட்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

கி. மு. சங்கங்கள் பற்றி விசாரணை

நல்லூர், திங்கள்

வடபகுதியிலுள்ள கிராம முன்னேற்றச்சங்கங்கள் பற்றிக் கடந்த வாரத்தில் மேலதிகாரிகள் இங்கு விசாரணை நடத்தியுள்ளனர்,

கிராம முன்னேற்றச் சங்கங்களிற் பெரும்பாலானவை இயங்கும் முறை பற்றிக் கிடைத்த புகார்களைத் தொடர்ந்து இந்த விசாரணை நடத்தப்பட்டது.

பல கிராம முன்னேற்றச் சங்கங்கள் செயற்படாமல் இருப்பதையும் விசாரணையின் போது கண்டுபிடித்தனர். செயற்படாமல் இருக்கும் சங்கங்களைக் கலைத்துவிடுவது பற்றியோ அல்லது புத்துயிர் அளிப்பதற்கான நடவடிக்கை பற்றியே விரைவில் அறிவிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

குப்பிளான் கொலை வழக்கில் எதிரிகள் விடுதலை

காங்கேசன்துறை, ஞாயிறு

குப்பிளானைச் சேர்ந்த வீரசிங்கம் சுப்பிரமணியத்தை வெட்டிக் கொலைசெய்ததாக ஆறுமுகம் சின்னத்துரை, செல்லக்குட்டி செல்வநாயகம், வேலுப்பிள்ளை செல்லக்குட்டி ஆகிய மூவர்மீதும் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் மல்லாகம் நீதிபதி ஜி. எவ். எச். அத்துறுபான விசாரணை முடிவில் எதிரிகளை விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.

சுன்னுகம் பொலிசைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் மூர்த்தியின் உதவியுடனும் எஸ. நடராசாவின் அனுசரணையுடனும் திரு. ஆர். கண்ணுத்துரை வழக்கை நடாத்தினர். திரு. ஆர். ஜே. செல்வரத்தினத்தின் அனுசரணையுடன் கே. வி. எஸ். சண்முகநாதன் முதலாம் எதிரி சார்பிலும் திரு. வி. செல்லத்துரையின் அனுசரணையுடன் திரு. ரி. கணேசலிங்கம் 2-ம், 3-ம் எதிரிகள் சார்பிலும் ஆஜரானர்கள்.

‘எமது உரிமைகளையே கேட்கிறோம்’

யாழ்ப்பாணம், திங்கள்

“நாம் ஒரு இனத்தை அடக்கி ஆள விரும்பவில்லை. நாம், நமக்குரிய உரிமைகளுடன் தலைநிமிர்ந்து வாழவே விரும்புகின்றோம்” என்று திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் வெள்ளிக்கிழமை இரவு நடைபெற்ற மொழிவழி பிரிந்த தொழிற்சங்கங்களின் மேதின விழாவில் பேசுகையில் கூறினார்.

திரு. செ. கோடீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்த மேதினக் கூட்டத்தில் காலஞ்சென்ற புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்து இரண்டு நிமிட மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது.

திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் பேசுகையில் அரசாங்க உத்தியோகத்தர்களை விரும்பும் இளம் பெண்கள் மிக விரைவில் எழுதுவினைஞர் சங்க உறுப்பினர்களாக உள்ளவர்களே தமது கணவர்களாக வரவேண்டும் என்று பெற்றோரை வற்புறுத்துவார்கள் என்று கூறினார்.

அரசாங்க எழுதுவினைஞர் சங்கச் செயலாளர் திரு இ. பாலசுப்பிரமணியம் பேசுகையில் தமிழ் அரசாங்க ஊழியர்கள் ஓரணியின் கீழ் திரள வேண்டிய அவசியத்தை வற்புறுத்தினார்.

அஞ்சல் எழுதுவினைஞர் சங்கத்தின் சார்பில் உரை நிகழ்த்திய திரு. எஸ். கந்தசாமி இன்றுள்ள தமிழ்ப் பெண்கள் தமது கணவர்களைச் சிங்களத்தில் தேர்ச்சி பெறச் சிபார்சு செய்வது அவமானம்தரும் சம்பவமெனக் குறிப்பிட்டார். இந்த நிலை மேலும் நீடிக்குமானால் தமிழினம் அழிந்துபோய்விடும் என்றும் அவர் கூறினார்,

அரசாங்க சேவைத் தமிழ்த் தொழிலாளர் சங்கத்தின் சார்பில் திரு. வ. பண்டிதர் பேசுகையில் ஒவ்வொரு தொழிற்சங்கங்களுடனும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பு கொள்ளவேண்டுமெனக் குறிப்பிட்டார்.

அரசினர் பாடசாலைத் தமிழாசிரியர் சங்கச் செயலாளர் திரு. வ. மகாலிங்கம் தமிழாசிரியர்களைச் சிங்களம் படிக்கவேண்டாமெனக் கேட்டுக்கொண்டார்.

மலை நாட்டுத் தொழிலாளர் கழகத்தைச் சேர்ந்த திரு. எஸ். கவிய பெருமாள் பேசுகையில், மலை நாட்டுத் தமிழ் மக்களும் வட, கிழக்கு இலங்கைத் தமிழ் மக்களும் ஒன்றுபட்டு உரிமைகளைப் பெறப்போவதனை எவராலும் தடுக்க முடியாது என்று சொன்னார்.

மேலும் பல தொழிற் சங்கப் பிரதிநிதிகளும் உரை நிகழ்த்தினர். திரு. வித்தியானந்த சர்மா வரவேற்புரை நிகழ்த்தினார்.

“மொழி, குடியுரிமை சட்டங்களை திருத்தி நீதிவழங்க வேண்டும்”

நல்லூர், ஞாயிறு

தமிழ்பேசும் தொழிலாளர்களைப் பாதிக்கும் பிரஜா உரிமை, மொழி உரிமை, வாக்குரிமை, குடியுரிமை, பற்றிய மனிதாபிமான மற்ற சட்டங்களை உடனடியாகத் திருத்தவேண்டும் என்றும், தமிழ் பேசும் தொழிலாளர்களைப் பாதிக்கும் நீதியற்ற சட்டங்களை உருவாக்க வேண்டாம் என்றும் அரசினரைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் மொழி வழி பிரிந்த தொழிற் சங்கங்களின் மேதின விழாவில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

திரு. செ. கோடீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்த மேதினக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு

இலங்கை வாழ் தமிழ்பேசும் தொழிலாளர் இலங்கைத் தமிழ்பேசும் இனத்தினின்று பிரிக்கப்பட முடியாதவர்கள் என்பதாலும், இலங்கை அரசாங்கம், தனது இனஒழிப்பு நடவடிக்கைகளுக்கு இந்நாட்டின் பொருளாதார வளத்தின் முதுகெலும்பாக விளங்கும் மலைநாட்டுத் தொழிலாளர்களை அவர்கள் தமிழரென்ற ஒரே காரணத்திற்காக அவர் தம் அடிப்படை உரிமைகளை மறுத்து அவர்களைப் பலிக்கடாக்களாக்கி வருவதாலும் இடதுசாரி ஐக்கிய முன்னணியினரும் அவர்தம் ஆதிக்கத்தின் கீழியங்கி வரும் தொழிற்சங்கங்களும் தமிழ்பேசும். தொழிலாளரின் அடிப்படை உரிமைகளான பிரஜா உரிமை, வாக்குரிமை, குடியுரிமை, மொழி உரிமை, கல்வி உரிமை, தொழில் உரிமை ஆகியவற்றைப் பற்றி ஏனோதானோ என்று இருப்பது அரசாங்கத்தின் இன ஒழிப்பு நடவடிக்கைகளின் வெற்றிக்கு ஏதுவாக இருப்பதாலும் சர்வதேசியம் பேசிய மார்க்சீய கட்சிகள் இன்று சிங்கள மொழி, சிங்களக்கலை, சிங்களக் கலாசாரம் என்று பேசத் தொடங்கிவிட்டதாலும இந்நாட்டில் தமிழ் பேசும் மக்கள் தமது மொழி, பண்பாடு ஆகியவற்றைப் பாதுகாத்து ஒரு தனித்த தேசிய இனமாக இருப்பதற்காக, இம் மே தினத்தில் யாழ்ப்பாண நகரசபை மண்டபத்தில் கூடியுள்ள இம்மாபெரும் தமிழ்பேசும் தொழிலாளர் அனைவரும் மொழிவழி பிரிந்த தமிழ் பேசும் தொழிலாளர் அணி திரட்டி எமது உரிமைப் போரை நடத்துவோமெனத் தீர்மானிக்கின்றனர்.

மேலும், இந்நாடு பொருளாதார முன்னேற்றமடைய வேண்டுமானால் இந்நாட்டில் வாழும் இரு தேசிய இனங்களுக்குமிடையே ஒற்றுமை நிலவுவது அவசியமென்னும் உண்மையை பலரும் ஏற்றுக்கொள்ளும் நிலை உருவாகிவிட்டதால், தமிழ் பேசும் தொழிலாளர்களைப் பாதிக்கும் பிரஜா உரிமை, மொழி உரிமை, வாக்குரிமை, குடியுரிமை பற்றிய மனிதாபிமான சட்டங்களை உடனடியாகத் திருத்தவேண்டுமென்றும், தமிழ்பேசும் தொழிலாளர்களின் தொழில் உரிமை, கல்வியுரிமை ஆகியவற்றைப் பாதிக்கக்கூடிய நீதியற்ற சட்டங்களை இயற்றவேண்டாமென்றும் இலங்கை அரசாங்கத்திடம் கோருகிறது.

‘தேர்ச்சிப் பரீட்சை எழுதவேண்டாம்’

நல்லூர், திங்கள்

இம்மாதம் 9-ம் திகதி நடைபெறவிருக்கும் சிங்களத் தகுதிப் பரீட்சைக்கு தோற்றவிருக்கும் தமிழ் அரசாங்க ஊழியர்களும், ஆசிரியர்களும் தமது முயற்சியைக் கைவிடவேண்டும் என்று அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் கேட்டுள்ளது.

அரசாங்க எழுதுவினைஞர் சங்கச் செயலாளர் திரு. இ. பாலசுப்பிரமணியம் விடுத்த வேண்டுகோளில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

கோடீஸ்வரன் வழக்கில் கிடைத்த வெற்றி எமக்கு சிறிது நம்பிக்கையை ஏற்படுத்தவேண்டும். கடந்த காலங்களில் சிங்கள பரீட்சையில் சித்தியடைந்தவர்களும், தோற்றியவர்களும் தமது நிலைக்காக வருந்துகிறார்கள். மேலும் இதற்காக பிரச்னைகளை உருவாக்காமல் வருங்காலத்தில் சிங்களத் தேர்ச்சிப் பரீட்சைக்கு தோற்றுவது சம்பந்தமாக கவனம் எடுக்கவேண்டும். தமிழ் அரசாங்க ஊழியர்கள் ஆசிரியர்கள் யாராயிருந்தாலும் சிங்களத் தகுதிப் பரீட்சைக்குத் தோற்றாது தமிழ்த்தாயின் மானத்தைக் காப்பாற்றவேண்டும்.

அரசினர் பாடசாலைத் தமிழ் ஆசிரியர் சங்கச் செயலாளர் திரு. வ. மகாலிங்கமும் தமிழாசிரியர்களை சிங்களத் தகுதிப் பரீட்சைக்குத் தோற்றவேண்டாமெனக் கேட்டுக்கொண்டுள்ளார்.

‘தமிழ்ப் பிள்ளைகளிடத்தில் தமிழ் ஆற்றல் குறைந்துள்ளது’

—கல்லூரி அதிபர்

வெள்ளை அறிக்கை அமுலைக்கண்டித்து ஆசிரியர் சங்கம் தீர்மானம்

நல்லூர், திங்கள்

“தாய்மொழிக் கல்வி புகட்டப்படும் சந்தர்ப்பத்தில் தமிழ்ப்பிள்ளைகள் தமது தாய் மொழியில் ஆற்றல் குறைந்தவர்களாகக் காணப்படுவது கவலைக்குரியது” என்று வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய அதிபர் திரு. ச. அம்பிகைபாகன் அகில இலங்கை அரசினர் பாடசாலைத் தமிழாசிரியர் சங்க விசேட பொதுக் கூட்டத்திற் பேசுகையிற் கூறினார்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிமண்டபத்தில் நடைபெற்ற இந்த விசேட கூட்டத்திற்கு திரு. மு. சுவாம்பிள்ளை தலைமை வகித்தார். முன்னாள் வடபகுதி உதவி வித்தியாதிபதி திரு. சி. உ. சோமசேகரம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

திரு. ச. அம்பிகைபாகன் பேசுகையிற் கூறியதாவது

ஆசிரியர்களுக்குத் தனித் தனியே சங்கம் வேண்டியதில்லை. எல்லா ஆசிரியர்களும் ஒன்றுபட்டு உழைக்கப் பொதுவான சங்கம் அவசியம். பிள்ளைகளுக்குக் கல்வி புகட்டுவதில் நாம் மிகவும் கவனம் செலுத்தவேண்டும். பிள்ளைகள் தமிழில் ஆற்றல் குறைந்தவர்களாக இருக்கிறார்கள். எல்லாப் பாடசாலைகளையும் தாய்மொழியிற் கற்பிக்க வேண்டுமென்று கூறும் இந்த நேரத்தில் தமிழ்ப்பிள்ளைகள் தமது தாய்மொழியில் குறைவாக இருப்பதற்குரிய காரணம் என்னவென்பது தெரியவில்லை. இந்த நிலையை ஆசிரியர்கள் ஒன்றுபட்டு மாற்றியமைக்கவேண்டும். பிரிவினை எல்லயம் மாறவேண்டும். தாய்மொழிக்கு முக்கியமளிக்கப்படும்போது ஆங்கில ஆசிரியர்கள் எளற வகுப்பு இருக்க மாட்டாது. பாஷைப் பிரச்சினைக்குத் தீர்வுகாண ஆசிரியர்கள் ஒன்றுபடவேண்டும்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அதிபர் திரு. ஈ. ஏ. தம்பர் பேசுகையிற் கூறியதாவது

ஆசிரியர்கள் வழிகாட்டவேண்டும்

மனிதன் சீவியகாலம் முழுவதும் பிரயோசனமான முறையிற் செயல்படவேண்டும்! பிள்ளைகளுக்கு முன்மாதிரியாக ஆசிரியர்கள் நடந்துகொள்ளவேண்டும். ஆங்கிலத்தைக் கட்டாயம் தெரிந்திருக்க வேண்டும். மொழிப்பிரச்சினையில் பிள்ளைகள் தமிழ் மாத்திரம் படிக்கவேண்டுமென்று எண்ணுவது தவறு. பிள்ளைகள் வேறு மொழிகளையும் கற்றிருக்கவேண்டும். பிறநாடுகளுடன் நாம் தொடர்பு கொள்ளுநிலை நேரிட்டால் ஆங்கில அறிவு அவசியம் வேண்டும். சமயபாடத்திற்கு முக்கியமளிக்கப்பட்டதனால் இலக்கியங்களைக் கற்பதிற் பிள்ளைகள் பின்நிற்கிறார்கள். இந்து நாட்டில் சமஸ்கிருதம் அவசிய பாடமாக்கப்பட வேண்டும். சமயத்தையும் கலைகளையும் வளர்க்காவிடின் நாடு முன்னேற்றமடையமுடியாது.

ஆசிரியர்களும் அரசியலும்

வடபகுதி முன்னாள் உதவி வித்தியாதிபதி திரு. சி. உ. சோமசேகரம் தமது உரையில் கூறியதாவது:

ஆசிரிய சேவையுடன் அரசியலைக் கலக்கக்கூடாது. இலங்கையும் இந்தியாவும் கீழ் நாட்டு நாகரிகத்தைச் சேர்ந்த நாடுகளாகும் என்று கூறுவது தவறு. இவை இந்து நாகரிகத்தைச் சேர்ந்த நாடுகளாகும். சைவம் வளர்ந்தால் தான் கல்வி வளருமென்பதனை ஆசிரியர்கள் நினைவில் கொள்ளவேண்டும்.

அரசாங்க எழுதுவினைஞர் சங்கச் செயலாளர் திரு. இ. பாலசுப்பிரமணியம் தமதுரையில் கூறியதாவது:

இனமும் மொழியும் வேறானவையல்ல

தமிழ்மொழியைத் தாய் மொழியாகக் கொண்ட காரணத்தால் தமிழ் ஊழியர்களுக்குப் பதவி உயர்வு மறுக்கப்பட்டுவருகிறது. இனத்தையும் மொழியையும் பிரிக்கமுடியாது. ஆங்கில ஆட்சியில் தமிழர்களும சிங்களவர்களும் உயர்வுதாழ்வின்றி வாழ்ந்தனர். அதனால் அன்று சுதந்திரம் கிடைக்கவேண்டுமென்று கிளர்ச்சிகள் செய்தனர். பலனும் பெற்றனர்.

ஒவ்வொரு மனிதனுக்கும் தனித்தன்மை உண்டு. இதனை அவர்கள் பேணிப்பாதுகாக்க வேண்டும். சுதந்திர உணர்வு ஒவ்வொருவர் உள்ளத்திலும் நிலைபெற்றுவிட்டால் அவர்களுக்குச் சுதந்திரம் வழங்க வேண்டியதில்லை.

(6-ம் பக்கம் பார்க்க)

கம்யூனிஸ்ட்

மேதின தீர்மானங்கள்

யாழ்ப்பாணம், ஞாயிறு

கம்யூனிஸ்ட் கட்சி, கம்யூனிஸ்ட் வாலிப முன்னணிகள் இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனம் ஆகியவற்றின் ஆதரவில் குருநகர் மைதானத்தில் நடைபெற்ற மேதினக் கூட்டத்தில் நிறைவேற்றப் பட்ட தீர்மானங்கள் வருமாறு:

21 கோரிக்கைகளை அரசாங்கத்திடம், தனியார்துறை முதலாளிகளிடமும், உடனடியாகச் சமர்ப்பிக்க வேண்டுமென்ற பிரேரணையை முழுமனத்துடன் இக்கூட்டம் ஆதரிப்பதுடன், 21 கோரிக்கைகளை ஆதரித்து அணிதிரண்டு நிற்கும் தொழிலாளர் வர்க்கத்தினருக்கு எதிராக உள்ள கூட்டு அரசாங்கத்தில், இடதுசாரி ஐக்கிய முன்னணித்தலைவர்கள் சேரக்கூடிய அபாயத்தையும், எதிர்த்து நிற்பதுடன் ஏகாதிபத்திய வாதிகளையும், ஐக்கிய தேசியக் கட்சியையும், அவர்களைச்சார்ந்த தலைவர்களையும் சேர்த்து இக்கூட்டம் எச்சரிக்கின்றது

“அதிகாரத்தை கைப்பற்றக்கூடிய ஒரு புரட்சிகர அணியாக இடதுசாரி ஐக்கிய முன்னணியை மாற்றுவதற்காக தொழிலாளிவர்க்கம் தமது ஐக்கியத்தையும் போராட்ட உணர்வையும் கட்டி வளர்க்குமாறு இக் கூட்டம் வேண்டுகின்றது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, சமஷ்டிக்கட்சி போன்ற கட்சிகளுக்கு சிறுபான்மையினர் பிரச்னைகளுக்கு தீர்வுகாண்பதற்கு வலுவில்லை என்பதை வலியுறுத்துவதுடன், முற்போக்கு எண்ணமுடைய சகல தமிழ் மக்களும், தென் இலங்கையிலுள்ள முற்போக்கு சக்திகளுடன் இணைத்து செயலாற்றுவதன் மூலம் பிற்போக்கு சத்திகளை ஒழித்துக் கட்டலாம் என்பதையும், பொருளாதார, சமூக, அரசியல், இனப் பிரச்னைகளுக்கு தீர்வுகாண்பதுடன். சகல சமூகத்தினரிடையிலும் சமத்துவத்தையும் சௌக்கிய உறவையும் ஏற்படுத்த முடியுமென்பதையும் இக்கூட்டம் வலியுறுத்துகிறது.

REGAL — JAFFNA
NOW SHOWING
Daily 3Shows. Sats.&Suns. Four
TOKYO by NIGHT
(Tohoscope - Colour)
(ADULTS ONLY)

சினிமாஸ் திரைகளில்
அடுத்த திரை விருந்து
எஸ். எஸ். ராஜேந்திரன் — விஜயகுமாரி
மற்றும் பலர் நடித்த
நானும் ஒரு பெண்
தென்னாட்டில் 125 நாட்களுக்கு மேல்
ஓடிய உன்னத தமிழ் திரை விருந்து

கிங்ஸ்லி பிளாஸா வெலிங்டன்
(கொழும்பு) (வெள்ளவத்தை) (யாழ்ப்பாணம்)
நிந்தாவூர் சினிமா ராஜ்மகால் சந்தியா
(நிந்த வூர்) (கல்முனை) (கம்பளை)
மற்றும் 4 திரைகளில்

எம். ஜி. ராமசந்திரன்—பி. சரோஜாதேவி
நடித்த
பெரிய இடத்துப் பெண்

கரபந்தாட்டப் போட்டி சாவச்சேரியில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஞாயிறு சாவகச்சேரி நல்வாழ்வுச் சங்கத்தின் ஆதரவில் நடைபெறும் கரபந்தாட்டப் போட்டி கடந்த புதன்கிழமை சாவகச்சேரி நகராண்மைக் கழகத்துக்கருகாமையில் உள்ள விளையாட்டுத் திடலில் ஆரம்பமானது.

சுன்னாகம் உடுவில் ஸ்ரார்ஸுக்கும், மானவலை மோகனதாஸ் விளையாட்டுக் கழகத்திற்கும் நடைபெற்ற போட்டியில், சுன்னாகம் உடுவில் ஸ்ரார்ஸ் வெற்றி பெற்றது. வல்வெட்டித்துறை டைனமோஸ் விளையாட்டுக் கழகத்திற்கும், சுன்னாகம் ரொக்கற் விளையாட்டுக் கழகத்திற்கும் நடைபெற்ற போட்டியில் வல்வெட்டித்துறை டைனமோஸ் வெற்றி பெற்றது.

நேற்று முன்தினம் சாவகச்சேரி அண்ணா 'ஏ' பிரிவிற்கும் குரும்பசிட்டி இதயதாரகை மன்றத்திற்கும் நடைபெற்ற போட்டி, ஆட்டம் முடிவுறாததால் வேறோர் நாளுக்கு ஒத்திப்போடப்பட்டது.

இறுதி ஆட்டம் 16ம் தேதி இரவு மின்சார வெளிச்சத்தில் நடைபெறும்.

இன்று நடைபெறும் மற்றுமொரு கிரிக்கெட் போட்டி

யாழ். — மாத்தறை பாடசாலைகள் கலந்து கொள்கின்றன

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணத்திலுள்ள இரு பாடசாலைகள் கோஷ்டிக்கும் மாத்தறை பாடசாலைகள் கோஷ்டிக்கும் இடையே கிரிக்கெட் போட்டி இன்று பிற்பகல் 12 மணிக்கு யாழ்ப்பாண மத்தியகல்லூரி மைதானத்தில் நடைடெறும்.

இந்தியாவிலிருந்து வந்து இங்கு திறமையாக விளையாடிய பாடசாலை மாணவர்களின் கிரிக்கெட்போட்டியைக் கண்டு களித்த கிரிக்கெட் பிரியர்களுக்கு இன்றும் நாளையும் நடைபெறும் இக்கிரிக்கெட் போட்டி நல் விருந்தாக இருக்கும். யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியைச் சேர்ந்த முதல் தர விரர்களும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக்கல்லூரியைச் சேர்ந்த முதல் தர வீரர்களும் மாத்தறை பாடசாலை கோஷ்டியுடன் மோதுவார்கள்.

கிரிக்கெட்போட்டி இன்று பிற்பகல் இரண்டு மணி தொடக்கம் மாலை ஆறு மணி வரை நடைபெறும். மீண்டும் நாளைக் காலையும் போட்டி நடைபெறும்.

யாழ்பாணக்கோஷ்டி

யாழ்ப்பாணம் மத்தியகல்லூரியைச் சேர்ந்த வி. சிவயோகநாதன், ஆர் சச்சிதானந்தம், ஏ. பற்குணராஜா, வி. அம்பலவாணர், டபிள்யு. வின்ஸ்ரன், ஏ. தயானந்தன், டி. கணேசகுமார், எஸ். ராஜதுரை, என். வை. அரசரத்தினம், எஸ். மேதர், சுன்னாகம் ஸ்கந்தவரோதயாவைச் சேர்ந்த இந்திரன், இந்திரகுமார், ராஜதுரை, ராஜரத்தினம், முனிராஜ்குமார், அமிர்னாத் ஆகியோர் விளையாடித் தகுதி பெற்றுள்ளனர். இவர்களில் சிறந்த 11 பேர், மாத்தறை பாடசாலைகள் கோஷ்டியுடன் இன்று விளையாடுவார்கள்.

பேச்சு, கட்டுரை போட்டி முடிவுகள்

நல்லூர், திங்கள்

காந்தி நிலையம், சிவியாதெரு சன சமூக நிலையத்தின் வருடாந்த விழாவையொட்டி கலைக் குழுவினரால் ஏற்பாடு செய்யப்பட்ட இல்லங்களுக்கிடையிலான பேச்சுப்போட்டி, கட்டுரைப் போட்டி, பொது அறிவுப் போட்டி ஆகியன கலைக் குழுத் தலைவர் திரு. ஐ. கந்தசாமி தலைமையில் நிலைய மண்டபத்தில் நடைபெற்றது. போட்டி முடிவுகள் வருமாறு:—

மத்திய பிரிவு—பேச்சுப் போட்டி: ப. செல்வநாதன், வ. அமிர்தலிங்கம், மா. பவானந்தன்.

கட்டுரைப் போட்டி: வ. அமிர்தலிங்கம், ப. செல்வநாதன், மா. பவானந்தன்.

மேற் பிரிவு — பேச்சுப் போட்டி: தா. தேவமதுரம், கா. தில்லையம்பலம், ப. லோகநாதன்.

கட்டுரைப் போட்டி: தா. தேவமதுரம், ப லோகநாதன், கா. தில்லையம்பலம்.

உயர் மேற்பிரிவு—பேச்சுப் போட்டி: அ. யோகராசா, கா. பீதாம்பரம், செ. தேவராசா.

கட்டுரைப் போட்டி: கா. பீதாம்பரம், த. தேவராசா, அ. யோகராசா

பொது அறிவுப் போட்டி (பொது): ச. மோசேஸ், வா. முத்தையா, அ. யோகராசா.

கல்வி அறிக்கை பற்றி ஆராயும்

நல்லூர், திங்கள்

கல்வி வெள்ளை அறிக்கையினால் தமிழ் பேசும் பிள்ளைகள் என்ன வகையில் பாதிக்கப்படுவார்கள் என்பதனைப் பற்றி ஆராய்ந்து எடுக்கவேண்டிய நடவடிக்கைபற்றி அரசினர் பாடசாலைத் தமிழர் ஆசிரியர் சங்கம் விரைவில் தீர்மானிக்கும்.

வெள்ளை அறிக்கை சம்பந்தமாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க அரசினர் பாடசாலைத் தமிழர் ஆசிரியர் சங்கம் உபகுழு ஒன்றினைத் தெரிவு செய்துள்ளது. உபகுழுவின் அறிக்கை கிடைத்ததும் எடுக்க வேண்டிய நடவடிக்கை பற்றி முடிவு செய்யப்படுமெனத்தெரிகிறது.

வானொலிநிகழ்ச்சிகள்

திங்கள்: 4-5-64

கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 பாமாலை, 6-55 கிறிஸ்தவநற்சிந்தனை, 7-15 தேர்ந்தஇசை, 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நிலைய ஒலிப்பதிவுகள், 5-45 திரை இசை.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 வீணை — தனலட்சுமி விஸ்வநாதன், 7-15 ஏ. சுந்தரம் — பாட்டு, 8-00 முஸ்லி நிகழ்ச்சி, 9-30 தமிழ் மூலம் சிங்களம், 10-00 நேயர்விருப்பம்.

திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-30 மங்கள இசை, 6-50 வாத்திய இசை, 6-55 அருள்வாக்கு, 7-00 துதிப் பாடல்கள், 7-30 கோமல் என், சங்கரன் — பாட்டு.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 இசைக்கோவை, 1-30 வாத்திய இசை, 1-50 கதம்பம், 2-10 கோமல் என். சங்கரன் — பாட்.

மாலை 5-15 திரைப்பட இசை.

இரவு 6-20 கிராமநிகழ்ச்சிகள், 7-40 காமகோடிபாய் — ஜலதரங்கம், 8-40 தேசபக்திப்பாடல்கள், 9-30 எம். கே. கோவிந்தராஜ பாகவதர்—பாட்டு.

சினிமா விமர்சனம்

மாயா ஜாலம்

'ரசிகன்'

கண்கவர் நடனங்கள், காதுக்கு இனிய பாடல்கள் மந்திர தந்திர மாயாஜாலக் காட்சிகள் பிரம்மராட்சதன் வேதாளம் பிரமாண்டமான பாதாள செட்டிங்ஸ் குறைவில்லாத கத்திச் சண்டை, வாள்சண்டை, மற்போர் குதிரைச் சவாரி, படகுச்சவாரி இவ்வளவையும் கோவைப்படுத்தும் ஒரு மகாராஜா மகாராணிக்கதைதான் "மாயா ஜாலம்" இப்படம் யாழ்ப்பாணம் ஸ்ரீ மனோகரா தியேட்டரில் வெள்ளி முதல் காண்பிக்கப்பட்டு வருகிறது. ரஞ்சன், கிருஷ்ணகுமாரி சித்திரா ஆகியோர் இப்படத்தில் திறம்பட நடித்திருக்கிறார்கள். எழில் மிகு நடனங்கள், கனவுலகம் போன்ற ஒரு சில காட்சிகள் ஜெமினி கலரில் ஒரு விசேட அம்சமாக படத்துக்கு சிறப்பளிக்கின்றன.

இந்திப்படத்தின் ஒலிப்பதிவாக வெளிவந்திருப்பதால் மொழிவேறுபாடு பல சந்தர்ப்பங்களில் நமது பார்வையை மோசம் செய்து விடுகிறது. உதாரணமாகச் சொல்வதானால் ஒருவர் வாயை ஆவென்று திறந்தபடி இருக்கிறார். அம்மா அப்பா என்ற வார்த்தைகள் ஏதோ ஒரு குழாயிலிருந்து வெளி விடுவது போல் அப்பொழுது அவர் வாய்க்குள்ளிருந்து வெளிவருகின்றன. இதனால் படம் பார்ப்பவர்கள் கண்ணை மூடிக்கொண்டால் தான் படத்தில் கதாபாத்திரங்கள் பேசுவதைப் புரிந்து கொள்ளக்கூடியதாய் இருக்கிறது. கண்களை மூடிக்கொண்டு முகத்தை மறுபக்கம் திருப்பினாலோ பக்கத்திலிருப்பவர் அவருக்கு அடுத்து இருப்பவரிடம் இரைவது அல்லவோ காதில் விழுகின்றது! அல்லாமலும் சினிமா என்பதே நொடிக்குப் பதினாறு படங்கள் என்றும், அடிக்குப் பதினாறு படங்கள் என்றும் பாயும் ஒரு கண்கட்டி வித்தையாயிருக்கும்போது கண்களை மூடிக்கொண்டு படம் பார்ப்பதென்பது சாத்தியப்படுமா? அதுவும் பேசும்பட விஞ்ஞானப் புதுமையை முழுக்கவும் பயன்படுத்திக்கொள்ளத்துணிந்த இதுமாதிரி ஒரு மாய வித்தைக் கதையையும் காட்சிகளையும் கொண்ட படத்துக்கு அப்படியெல்லாம் கண்பொத்தும் ஜாலம் அறவே சரிப்பட்டுவராதே

படம்முடிந்து நாம் வெளியே வரும்போது மனத்தில் நிற்பதெல்லாம் முதலில் குறிப்பிட்ட ஆட்டமும், பாட்டும், வர்ணமும், சண்டையும் போன்ற சங்கதிகள் தாம் கதையம்சத்தைப் பிரம்மராட்சதன் விழுங்கி கருச்சிதைத்து கூழ்முட்டையாகி விடுகிறான்.

கதாநாயகனும் கதாநாயகியும் அவர்களது கோஷ்டி ஆட்களும் ஒருநொடிக்குள்ளே குள்ளர்களாக்கப்பட்டு கிளிக் கூண்டில் சிறைப்படுத்தப்படுகிறார்கள். பிரம்மராட்சத வேதாளத்தின்மீது எறும்பு ஊர்வது போல ஊர்ந்து முடிவில் அவனைக் கொன்று தீர்த்து விடுகிறார்கள். அப்பொழுதெல்லாம் அவர்களில் ஒருவன் கிளிப்பிள்ளை போலப் பேசுவதும் அசட்டுத்தனமாக நடிப்பதும் கதையை வெறும் கேலிக்கூத்தாக்கி அனைத்தையும் ஒரு மாயாஜால உலகமாகவே நமக்குக் காண்பிக்கிறது.

வேதாளங்கள் வசிக்கும் பாதாள உலகத்தில் நாக பாம்புகள் எப்படி நேர்த்தியாகப் படமெடுக்கின்றன!

பாதகமில்லை. மேதினம் கொண்டாடிய தொழிலாளர் உலகம் சற்றுவேளை பொழுது போக்கி மகிழ உகந்த படம் — மாயாஞாலம், மன்னிக்கவும் மாயாஜாலம்.

எனது இல. எல். எச். சி | 59 | 62
(460-ம் அத்தியாயக்)
காணி கொள்ளும் சட்டம்.
7-ம் பிரிவின்படியான அறிவித்தல்

கீழே விபரிக்கப்பட்டிருக்கும் காணியைப் பொதுத் தேவையொன்றிற்கென எடுத்துக்கொள்ள எண்ணியிருக்கப்படுகிறது. மேலதிக விபரங்களுக்குத் தயவு செய்து 30-4-64 ந் திகதியின் 14021ம் இலக்க அரசாங்க வர்த்தமானியைப் பார்க்கவும்,

அட்டவணை

காணியின் பெயர்:- அரக்பொடகுருந்துவத்தை குடாமடக்கும்புற, வரிமதிப்பு இல. 177, 177|1. 177|2, 177|3, 177|4, 177|5, காலி வீதி, வரிமதிப்பு இல. 19, 4-ந் குறுக்குத் தெரு.

கிராமத்தின் பெயர்:- மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், பாணந்துறை தோட்டமுனை, பாணந்துறை நகர சபை எல்லைக்குள், வட்டார இல 2- பட்டிய வடக்கு, பட்டிய வடக்கு.

துண்டு, பட இல, பீ. பீ. எ. 5308 இல் துண்டு 1.

ஆர். பாஸ்கரலிங்கம்,
களுத்துறை மாவட்ட உதவி
அரசாங்க அதிபரும்,
காணி கொள்ளும் அதிகாரியும்.

குறிப்பு இல. இஅ 2 | 16
(460 ம் அத்தியாயக்)
காணி கொள்ளும் சட்டம்.
7-ம் பிரிவின்படியான அறிவித்தல்

கீழே விபரிக்கப்பட்டிருக்கும் காணியைப் பொதுத் தேவையொன்றிற்கென எடுத்துக்கொள்ள எண்ணியிருக்கப்படுகின்றது. மேலதிக விபரங்களுக்குத் தயவுசெய்து 30-4-64 ந் திகதியின் 14,021 ம் இலக்க அரசாங்க வர்த்தமானியைப் பார்க்கவும்:

அட்டவணை

காணியின் பெயர்: பொல்கஸ்மேஹேன அல்லது பொலகஸ்மேஹேன.

கிராமத்தின் பெயர்: மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், றைகம் கோறளை, கும்புக்கே பத்துவயில் கணன்வில.

துண்டு, பட இல: மூல கிராமப் பட இல. ஏ. 5258 இல் துண்டு 1,

ஆர். பாஸ்கரலிங்கம்,
களுத்துறை மாவட்ட உதவி
அரசாங்க அதிபரும்
காணி கொள்ளும் அதிகாரியும்

வட இலங்கைச்சங்கீத சபை யாழ்ப்பாணம்

சங்கீதப் பரீட்சைகள் 1964

இவ்வாண்டுப் பரீட்சைகள் யாழ்ப்பாணம், கொழும்பு, கண்டி, திருக்கோணமலை ஆகிய இடங்களில் 1964 ம் ஆண்டு ஆடி மாதம்25-ந்திகதி சனிக்கிழமை நடைபெறும்.

விண்ணப்பங்கள் 10-6-64 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

விண்ணப்பப்பத்திரங்கள் மற்றும் விபரங்கள் ஆதியனவற்றிற்கு தலைவர் வட இலங்கைச் சங்கீதசபை, கல்விக் கந்தோர், யாழ்ப்பாணம் என்னும் விலாசத்திற்கெழுதிப் பெற்றுக் கொள்ளவும்.

சென்ற ஆண்டுப் பாடத்திட்டத்திற்கமையவே பரீட்சைகள் நடைபெறும்.

எஸ். தணிகாசலம்,
தலைவர்,
உதவி வித்தியாதிபதி,
வட பிரதேசம்.

கல்விக் கந்தோர்,
யாழ்ப்பாணம். 8-4-64 349

தேவை

சித்திரமேழி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு ஒரு மனேச்சர் தேவை. கூட்டுறவுப் பயிற்சிக் கலாசாலைப் பரீட்சையில் சித்தியடைந்தவராய் இருத்தல் வேண்டும். வயது 21—30வரையும். பிணை: காசுப் பிணை ரூபா ஆயிரம், ஆதனப் பிணை ரூபா மூவாயிரம், சம்பளம் ரூபா நூறு. அனுபவம் பெற்றவராய் இருத்தல் மிகவும் நன்று. 10-5-64 இற்குமுன் விண்ணப்பிக்கவும்.

சி. காசிப்பிள்ளை,
காரியதரிசி

விலாசம்:
சித்திர மேழிப் ப. நோ.
கூ. சங்கம், இளவாலை.
சி. நமசிவாயம்
350 தலைவர்.

[illegible] விளம்பரம்

கபிரியேல் தயாரிப்புகள்

1. **கபிரியேல் பெயின ஒயில்** சகல நோவு, வீக்கம்,வாதம் எதையும் குணமாக்கும். இன்னும் மாடுகளுக்கேற்படும் மேற்படி ரோகங்களும் குணமாகும்.
2. **கபிரியேல் ஒயின்மென்ற்** சகல அவியல், புண், கட்டு எதையும் ஆற்றும் ஒரே புண் களிம்பு.
3. **கபிரியேல் ஸ்பெஷல் பாம்** தடிமன், தலையிடி, சந்துளி போன்ற எல்லா வேதனைகளையும் தணிக்கவல்லவிசேஷ பாம்.

தயாரிப்பாளர்கள்.
GABRIELS,Chunnakam. 273

ஐம்பெருங் காப்பியங்களில்
மகத்தான

'சிலம்புச் செல்வி'

யாழ்ப்பாணம் நகரசபை மண்டபத்தில் மேமாதம் 23-ம் திகதி நகரசபை மேயர் திரு. ரி. எஸ். துரைராஜா அவர்கள் தலைமையிலும் மேமாதம் 24ந் திகதி செனட்டர் எஸ். நடேசன் அவர்கள் தலைமையிலும் மாலை 6-30 மணிக்கு வெள்ளவத்தை சைவமங்கையர் கழக ஆதரவில் வித்தியாலய மாணவிகள் பெருமையுடன் அளிக்கின்றனர்.

"சிலப்புச் செல்வி"

அனுமதிச் சீட்டு விபரம்:

பிரத்தியேகம்	— ரூ. 25-00
முதலாம் வகுப்பு	— ரூ 10-00
இரண்டாம் குப்பு	—ரூ. 5-00
மூன்றாம் வகுப்பு	— ரூ. 2-00

ரிக்கட்டுகள் வேம்படி மகளிர் கல்லூரி அதிபரிடமும், இல. 8, பழைய பூங்கா வீதியிலும் பெற்றுக்கொள்ளலாம். 284

கலைப்பிரசார சபை (கொழும்பு)
ஆதரவில் நடைபெறும்
அகில இலங்கை

திருப்புகழ் போட்டி

போட்டி ஸ்தானங்கள் 1, யாழ்ப்பாணம், 2. கொழும்பு.

யாழ்ப்பாணத்தில், மேமாதம் 26-ந் திகதியும், கொழும்பில் ஜூன் மாதம் 6-ம் திகதியும் தெரிவுப்போட்டி நடைபெறும். இறுதிப் போட்டியும் பரிசளிப்பு விழாவும் கொழும்பில் 7-ம் திகதி நடைபெறும்.

விண்ணப்பப்பத்திரங்களுக்கு கீழ்க்காணும் முகவரிக்கு மனுச் செய்யவும்.

திருமதி A. கைலநாதன், 17-ம் நம். இன்றநாஷனல் பௌத்தசங்க வீதி, வெள்ளவத்தை.

1. குறிப்பு:- விண்ணப்பங்கள் மே 20-ம் திகதி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும்.
2. இருபாலாரும் போட்டியில் கலந்துகொள்ளலாம்.
3. சங்கீத ஆசிரியர், இப்போட்டியில் பங்குபற்ற முடியாது.

இங்ஙனம் கலைப்பிரசார சபை குழு, 74, பராக்கிரம வீதி, டெகிவல 285

விற்பனைக்கு

நல்ல நிலைமையிலுள்ள EL தொடர்பிலக்கப் போர்ட் கொன்ஸல் கார் (வெள்ளை நிறம்) விற்பனைக்கிருக்கிறது. விபரங்களுக்கு கீழ்க்கண்ட விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும்: கே. காசிவிஸ்வநாதன், குளப்பிட்டி, கொக்குவில். டெலிபோன்: யாழ்ப்பாணம் 7009. 282

தேவை

காஷியராகக் கடமையாற்றுவதற்கு பிணைப்பணம் கட்டக்கூடிய ஆங்கில அறிவுடைய ஒருவர் தேவை. மாதச்சம்பளம் ரூ. 150/- நற்சாட்சிப்பத்திரங்களுடன் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

கலாசோதி இன்டஸ்றீஸ், 160, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். 283

வந்துவிட்டார்கள் ! வந்துவிட்டார்கள் !!

சங்கீத ரசிகர்களுக்கு ஓர் விசேட அறிவித்தல்

அகில இந்திய றேடியோ புகழ் நாதஸ்வர வித்துவான்

கல்லிடக்குறிச்சி

K.A.ராமச்சந்திரன் T.S.சுப்பிரமணியம்

அமிர்தகான இசை விருந்தளிப்பார்கள்.

தவில் வித்துவான்.

K. பழனிமலை M. சுப்பையா

ஆகிய வித்துவான்களை இந்தியாவிலிருந்து வரவழைத்துள்ளோம்

உங்கள் மங்கள வைபவங்களுக்கும்,

மகோற்சவங்களுக்கும் மற்றும் விசேட

தினங்களுக்கும் இவர்களை அழைத்து

இவர்களது இன்னிசையைக் கேட்டானந்தியுங்கள்.

விபரம் வேண்டுவோர் கீழ்க்காணும் விலாசம்: கைதடி

இங்ஙனம்
K. பழனிமலை(தவில்)

மொழிவழக்கு வெற்றி நம்பிக்கையளித்துள்ளது

வரவேற்புபசார கூட்டத்தில் கோடீஸ்வரன் பேச்சு

நல்லூர், ஞாயிறு

'மொழி வழக்கு சட்டப்படி அட்டோர்ணி ஜெனரலுக்கும் எனக்கும் இடையே நடைபெற்றாலும் அது தமிழ் இனத்திற்கும் சிங்கள ஏகாதிபத்தியத்திற்குமிடையே நடைபெற்றதென பதனை நினைவிற் கொள்ளவேண்டும். இந்த வழக்கில் கிடைத்த வெற்றி எமக்குநம்பிக்கையளித்துள்ளதாயினும் இந்த வெற்றிக்கு நான் மட்டும் பொறுப்பானவன் அல்ல' என்று அரசாங்க எழுதுவினைஞர் சங்கத் தலைவர் திரு. செ. கோடீஸ்வரன் யாழ்ப்பாண மத்திய கல்லூரியில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் கூறினார்.

திரு. கோடீஸ்வரனின் வெற்றியையிட்டு அவருக்கு அகில இலங்கை அரசினர் தமிழர் ஆசிரியர் சங்கம் வரவேற்புபசாரம் அளித்தது. திரு. மு. சுவாம்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் திரு. கோடீஸ்வரன் நன்றி தெரிவித்துப் பேசுகையில் கூறியதாவது:

இரண்டு தேசிய இனங்களும் மொழியால், மதத்தால், கலையால் வேறுபட்டுள்ளன. தேசிய ஒருமைப் பாட்டுக்கு தேசிய இனங்களிடையே ஒற்றுமை இருக்கவேண்டும். ஆனால் இலங்கையில் இருஇனங்களும் வேறுபட்டிருப்பதனால் தேசிய ஒருமைப்பாடு ஏற்படாது போய்விட்டது.

இந்நாட்டின் 60 சதவிகித வருமானத்தைத் தருபவர்கள் தமிழ்த் தொழிலாளர்களே. தொழில் வர்க்க ஒற்றுமைக்குப் போராடுபவர்களாக கூறுபவர்கள் மலைநாட்டுத் தமிழ்த் தொழிலாளர்களுக்குள தனையும் சாதிககவில்லை.

இரு தேசிய இனங்களுக்கு மிடையே நடைபெறும் போராட்டத்தின் அடிப்படையைச் சிந்திக்க வேண்டும். ஒரு இனத்தை ஒரு இனம் அடக்கி ஆள முனைய, மற்றைய இனம் அடிமை வாழ்வை எதிர்த்து தனித்தன்மையைக் காப்பாற்ற முனைகிறது. தமிழ்பேசும் மக்களின் ஒன்றுபட்ட சக்தி இனவிடுதலைக்கு வழிகாணும்.

சுன்னாகம் துப்பாக்கி சம்பவம்

இன்னொருவர் மரணம் சந்தேக நபர் சரண்புகுந்தார்

காங்கேசன்துறை, சனி

சுன்னாகம் மூக்கொலை சம்பவத்தில் காயப்பட்டு யாழ்ப்பாணத்தில் அனுமதிக்கப்பட்ட மூவரில் செ. பரமு என்பவர் மரணமாகிவிட்டார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்த துப்பாக்கி சூட்டுச்சம்பவத்தில் ஏற்கனவே மூவர் இறந்துவிட்டது குறிப்பிடத்தக்கது.

இக்கொலை சம்பந்தமாகத் தலைமறைவாகத் திரிந்த செ. சிவலிங்கம என்னும் சந்தேக நபர் வெள்ளிக்கிழமை மல்லாகம் நீதிபதி முன்னிலையில் சரண் புகுந்தார். சிவலிங்கத்தை இம்மாதம் 8-ம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதிபதி உத்தரவிட்டார்.

லாவோஸில்

வலதுசாரி—நடுநிலைமை கூட்டு ஒப்பந்தம்

வியன்டைன், மே 2.

லாவோஸில் வலதுசாரிகளும், நடுநிலைமைக்காரர்களும் ஒன்று சேர்ந்துள்ளதாக நடுநிலைமைப் பிரதமர் சுவன்னபூமா தெரிவித்தார். இடதுசாரிகளையும் தம்முடன் சேருமாறு அவர் கேட்டுள்ளார். வலதுசாரி-நடுநிலைமை கூட்டு ஒப்பந்தம் ஒன்றும் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

வலதுசாரி-நடுநிலைமஅரசாங்கத்தை ரஷ்யாவும் பிரிட்டனும் ஆதரித்துள்ளன.

மலேசியாவின் புதிய மந்திரிசபை

கோலாலம்பூர், மே 2

மலேசியாவின் புதிய மந்திரிசபை அமைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. திரு. துங்கு அப்துல் ரஹ்மான் பிரதமராகவும், திரு. அப்துல் ரஸாக் உதவிப் பிரதமராகவும் பதவியேற்றுள்ளனர். 15 பேர் கொண்ட புதிய மந்திரிசபையில் முன்னைய மந்திரிகளைவிட இரு புதிய மந்திரிகளும், 4புதிய அமைச்சுகளும் சேர்க்கபபட்டுள்ளன.

புதிய பார்லிமெண்டின் கூட்டம் இம்மாதம் 18-ந் திகதி தொடக்கம் 22-ந் திகதிவரை நடைபெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ராஜாஜியை ஷேக் சந்திப்பார்

புதுடில்லி, மே 2

புதுடில்லியிலுள்ள திரு. ஷேக் அப்துல்லா எதிர்வரும் செவ்வாய்க்கிழமை சென்னை சென்று திரு. ராஜாஜியை சந்திப்பார்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 65-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு மே மாதம் 4-ந் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

மாட்டு வண்டி சவாரி போட்டி முடிவு

ஊர்காவற்றுறை, சனி

புளியங்கூடல் "மகாமாரி" சனசமூக நிலையத்தினரால் நேற்று மாலை புளியங்கூடல் "புதுவெளி" விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற தீவுப்பகுதிக்கான மாட்டு வண்டிச் சவாரிப் போட்டியில் வேலணை, புளியங்கூடல் ஆகிய இடங்களில் இருந்து வந்த வண்டிகள் கலந்து கொண்டன. வெற்றி பெற்ற வண்டிகளுக்கு உள்ளூராட்சி ஆணையாளர் திரு. துரைசாமி - இராசேந்திரா பரிசுகளை வழங்கினர். வெற்றி விபரம் பின்வருமாறு:

முதலாவது இடம் திரு. வே. நாகலிங்கம் (புளியங்கூடல்) இரண்டாவது இடம் திரு. வே. செல்லத்துரை (புளியங்கூடல்) மூன்றாவது இடம் திரு வே. முருகேசு (புளியங்டல்)

மேற்படி நிலையத்தினரால் நடத்தப்பட்ட உழவு இயந்திரக்கலப்பை கொழுவின் போட்டியில் சுருவில், புளியங்கூடல்' கரம்பன், காரைநகர், பரந்தன் ஆகிய இடங்களில் இருந்து வந்த ஒன்பது "உழவு ஆயந்திரங்கள்" கலந்து கொண்டன. இப்போட்டியைப் பார்ப்பதற்கு ஆண் பெண்பார்வையாளர்கள் பல்லோர் மைதானத்தில் திரண்டிருந்தனர். கரம்பனைச் சேர்ந்த திரு. எஸ். கந்தசாமி முதலாவது இடத்தையும், புளியங்கூடலைச் சேர்ந்த திரு. மகாலிங்கம் திரு. கே. செல்வநாயகம் இரண்டாம், மூன்றாம் இடங்களையுற பெற்றனர்.

'தமிழ்ப்பிள்ளை . . .

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

இன மத வேற்றுமைகள் ஒழிக்கப்படவேண்டும் என்ற நோக்குடைய ஐக்கிய நாடுகள் சபையில் அங்கம் வகிக்கும் நமது நாட்டில் நடைபெறும் சம்பவங்கள் வேதனை தருவதாக உள்ளது.

இந்த விசேட கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

கல்விக் கொள்கை பற்றி வெளியான வெள்ளையறிக்கையைப் பற்றிய அபிப்பிராயங்களை ஜனப்பிரதிநிதிகள் சபை, ஸ்தலஸ்தாபன சபைகள் என்பவற்றின் மூலமும் பொதுமக்கள், தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் மூலமும் பெறுமலே நேரடியாக அரசாங்கம் அமுல் நடத்தவிருப்பது ஜனநாயகத்துக்கு அமையாததாய் இருப்பதோடு சிறுபான்மையினரைப் பாதிப்பதாயுமிருப்பதால் இச்சங்கம் இதை எதிர்க்கின்றது.

உலக வழக்குக்கமையப் பிரஜா உரிமையற்ற மக்களின் கல்வி தேசிய மொழியிலேயே இருக்கவேண்டுமென்ற அடிப்படையில் இலங்கைவாழ் தோட்டத் தொழிலாளர்களின் குழந்தைகள் கல்வி சிங்களத்திலேயே இருக்கவேண்டுமென்ற வெள்ளையறிக்கையின் முடிபு ஒரு இனத்தின் மொழியுரிமையையும் அறிவுரிமையையும் பறிப்பதோடு மனித இனத்தின் அடிப்படை உரிமையையும் பறிக்கின்றது. எனவே இப்பிழையான முடிபை நமது சங்கம் எதிர்ப்பதோடு தமிழ் பேசுமினம் தம் தாய்மொழி மூலமே கல்வி பெறவேண்டுமென்பதற்கு இது எதிரானதென்பதையும் அரசாங்கத்துக்குச் சங்கம் சுட்டிக்காட்டவிரும்புகின்றது.

தமிழ்மொழியன்றி வேற்று மொழி அறியாத தமிழாசிரியர்கள் ஏகாதிபத்திய ஆட்சியின்கீழ்க்கூட அயல்மொழி படிக்காமலே கடமையாற்றினார்கள். இப்போது அரசியல் மொழியில் அவர்கள் தேர்ச்சி பெற்றால்தான் சம்பள உயர்வு, பதவியுயர்வு என்பன கொடுக்கப்படுமென்ற நிபந்தனை தமிழாசிரியர்கட்கு இழைக்க பெரும் அநீதியாயுமிருப்பதால் இச்சங்கம் தனிச்சியவள் நிமுலை எதிர்க்கின்றது.

கூட்டு அரசாங்கம் . . .

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கூறியதிலிருந்து, அவர் விலகத் தயாரில்லை என்று ஊகிக்கலாம்.

இவ்வித நிலையில் கூட்டு அரசாங்கம் ஏற்பட முடியுமாயின் அது மிகவும் ஆச்சரியமே.

* * *

இவ்வளவு மேதினக் கூட்டங்களிலும் தமிழ்மொழியைப் பற்றியோ, மலைநாட்டுத் தொழிலாளரின் பிரஜா உரிமையைப் பற்றியோ யாரும் ஒரு வார்த்தையும் கூறவில்லை.

ஆனால் பாலா தம்பு பேசுகையில் சுமார் பத்து லட்சம் தொழிலாளரின் வாக்குரிமை பறிக்கப்பட்டிருக்கையில் ஜனநாயகம் இங்கு இருப்பதாக யார் கூறமுடியுமென்றும் பார்லிமெண்ட் சபை ஒரு கேலிக்கூத்து என்றும் சொன்னார்.

இடதுசாரி ஐக்கிய முன்னணி, தங்கள் மேதினச் செய்தியில் தோட்டத் தொழிலாளரின் பிரஜா உரிமைப் பிரச்னை பற்றி ஒன்றும் கூறாமல்விட்டுவிட்டதற்கு, திரு. தொண்டமான் தலவாக்கொல்லையில் நடந்த மேதினக் கூட்டத்தில் வருந்தினர். இத்தொழிலாளரை விட்டுவிட்டு, இங்கு சோஷலிஸ ஆட்சியை ஏற்படுத்தமுடியாதென்றார். குறுகிய வகுப்புவாத மனப்பான்மையை அரசாங்கமும் மற்ற எல்லாக் கட்சிகளும் விட்டுவிட்டு, இந்நாட்டுப் பொருளாதாரத்துக்கு முதுகெலும்பு போன்ற தோட்டத் தொழிலாளருக்கு மனித உரிமை அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

ஹட்டனிலே, நடந்த இலங்கைத் தொழிலாளர் கழக மேதின விழாவில் டாக்டர் நாகநாதன் பேசுகையில், தமிழ்பேசும் தொழிலாளருக்கு இது சந்தோஷ தினமல்லவென்றும் அவர்கள் தங்கள் உரிமையைப் பெறத் தங்களை அர்ப்பணித்துக்கொள்ள வேண்டுமென்றும் கூறினர். தமிழரசுக் கட்சி, வடக்கிலுள்ள தமிழர் மட்டுமன்றி, மலைநாட்டுத் தமிழரின் நலவுரிமைகளைப் பாதுகாக்க அமைக்கப்பட்டதென்றும் வி. ராஜதுரை கூறினர்.

* * *

தமிழ்பேசும் ஊழியர்களின் உரிமைகளுக்காகச் சிங்கள ஊழிய போராட 1956-ம் வருடத்துக்குப்பின் மறுத்துவிட்டதாகவும், ஆகவே மொழி அடிப்படையில் தொழிற்சங்கத்தை ஏற்படுத்தவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதாகவும், இடதுசாரி வர்க்க ஒற்றுமை வெறும் கற்பனையே என்றும் அரசாங்க எழுதுவினைஞர் சங்கத் தலைவரும் வெற்றிவீரருமான கோடீஸ்வரன் யாழ்ப்பாணக் கூட்டத்தில் பேசுகையில் கூறினர்.

ஜூன் 1-ந் திகதி கட்டாய ஓய்வு உத்தரவு அமுலானால் அன்று சுதந்திர தமிழ்நாடு உருவாவதைத் தடுக்கமுடியாதென்று இந்தியாவிலிருந்து திரும்பியுள்ள உடுப்பிட்டி மெம்பர் சிவசிதம்பரம், அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் நடத்திய மேதினக் கூட்டத்தில் எச்சரித்தார். மொழிவழி பிரிந்த தொழிற்சங்கத்துடன் தமிழ் எம். பி.க்கள் ஒத்துழைப்பரென்று வட்டுக்கோட்டை எம். பி. அமிர்தலிங்கம் அதே கூட்டத்தில் உறுதியளித்தார்.

உலகத் தொழிலாளர் ஒன்றுபடுவதற்கான மேதின விழாவிலே இங்கு இலங்கைத் தொழிலாளர் எவ்விதம் பிரிந்துள்ளனரென்பதை இப்பேச்சுகள் பலவும் காட்டுகின்றன. ஆனால் ஒவ்வொருவரும் தங்கள் கருத்துகளை மனம் விட்டுப்பேசியது, இன்றும் இங்கு ஜனநாயக உரிமை இருக்கிறதென்பதற்கு அறிகுறியாகவும் நம்பிக்கையளிப்பதாகவும் இருக்கும்.

வடபகுதி . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வும் ஆசிரியர்கள் பலரும் பஸ்களை நம்பி ஏமாற்றமடைவதனைத் தடுக்கவும் இ. போ. சபை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

கடந்த காலங்களில் பாடசாலை மாணவர்களுக்கென விசேஷ பஸ் சேவைகள் நடத்தப்பட்டதாயினும் அவை ஒழுங்காக நடததப்படாததால் மாணவர்கள் கஷ்டப்பட்டனர். வாரநாட்களில் பாடசாலைக்குச் செல்ல மாணவமாணவிகள் பஸ் வண்டிக்காக காத்திருக்கும் அதே சமயத்தில் தொழிலாளர்களும், அரசாங்க உத்தியோகத்தர்களும் பஸ் வண்டியில் ஏற்றக்காத்திருப்பதனால் நெருக்கடி ஏற்படுகிறது.

பிரயாணிகளுக்கு அசௌகரியம் ஏற்படாமலும் குறித்த நேரத்தில் மாணவமாணவிகள் பாடசாலைக்குச் செல்லவும் இ. போ. சபை நிர்வாகிகள் தகுந்த ஏற்பாடுகள் செய்துள்ளனர்.

பாடசாலை மாணவமாணவிகளுக்கான விசேஷ பஸ் சேவை இன்று காலை ஆரம்பிக்கப்படும். காலையிலும் மாலையிலும் இரு சேவைகள் நடத்தப்படும்'

தற்போது பஸ் சேவை நடைபெறும் பாதைகளில் விசேஷ பஸ் சேவைகள் நடத்தப்படும். தூரங்களைப் பொறுத்து பஸ் புறப்படும் நேரம் அமைக்கப்பட்டுள்ளது.

விசேஷ பஸ் சேவை நடத்தப்படும்போது ஏனைய பிரயாணிகளுக்கான பஸ்சேவை வழமை போல நடைபெறுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வடபகுதிக்கு . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கருத்து வேற்றுமையின் எதிரொலியினால்வடபகுதியிலுள்ள சமசமாஜக் கட்சிப் பிரமுகர்களின் ஆதரவைத் திரட்டுமுகமாக டாக்டர் பெரேரா இங்கு வந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

மொரட்டுவை எம். பி. யும் சமசமாஜக் கட்சிப் பிரமுகருமான திரு. மெரில் பெர்னண்டோ சென்ற வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற மேதினக் கூட்டங்களில் கூட்டு அரசாங்கத்தை எதிர்த்துக் கடுமையாகத் தாக்கிய பேசியதால் அந்த அபிப்பிராயத்தை மாற்றி கூட்டு அரசாங்க யோசனைக்கு ஆதரவு திரட்டுமுகமாக டாக்டர் என். எம். விஜயம் செய்திருப்பதாக அறியப்படுகிறது.

தங்கப்பதக்கம் பெற்றார்

யாழ்ப்பாணம், திங்கள்

புளியங்கூடல் ஜனசமூக நிலையத்தினரால் நடாத்தப்பெற்ற இயந்திரக் கலப்பை கொழுவும் போட்டியில் திரு. செ. கந்தசாமி முதலிடம் பெற்றார். இவருக்கு தங்கப் பதக்கம் பரிசாக அளிக்கபபட்டது.

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

உ த வி!

எழுதத் தயவரும் ஆாமதமாகும் பேனைக்கு ஒரு நல்ல உதவி! அதுதான் பார்க்கர் சுப்பர் குயிங் — சகல பேனைகளுக்கும் சாலச் சிறந்ததொரு மை. சுப்பர் குயிங்கில் எழுதும் போதே பேனையை சுத்திகரிக்கவும் அடைசலை அப்புறப்படுத்தவும் வல்ல சொல்வ - X உண்டு.

இது ஒரு
பார்க்கர் பேனா
கம்பனியின் உற்பத்தி
உலகினரால் அதிகமாக நாடும் பேனைகளைத் தயாரிக்கும் ஸ்தாபனத்தினது.